1289

# ஜகன்மோகினி
# JAGANMOHINI

1—3—58

20 நயா பைசா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1958
MADRAS

1289
4-58

SL
1211 N22
N58.353.
183248



1—3—58



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

மார்ச் 1958. மலர் 35, இதழ் 3. ஏவிளம்பி ௵ மாசி ௴

## விஷய அட்டவணை


சாக்ளா கமிஷன் விளைவுகள்.
—V. K. பார்த்தசாரதி ஐயங்கார் ... 1

என்னைக் கவர்ந்த காந்தி
—K. சடகோபன் ... 6

பாரதப் பூங்கா
—வசுமதி ராமசுவாமி ... 9

அவனே கடவுள்!
—பி. எஸ். அரவிந்தா ... 11

திருந்தியது எப்படி?
—டி. எஸ். ராஜகோபாலன் ... 16

❋ திரை உலகம் ❋
—பாரு ... 20

கருங்கடலில் களிப்பு அலை
—வை. மு. விஜயலக்ஷ்மி ... 21

சொல்லட்டுமா!
—ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவ் ... 26

கிழக்கு வெளுத்தது
—வை. மு. கோ. ... [41-60]

# சாக்ளா கமிஷன் விளைவுகள்

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி. ஏ. பி. எல்.

ஸ்ரீ டி. டி. கே., நிதிமந்திரி பதவியினின்றும் விலகி விட்டார். ஸ்ரீ நேருஜி, தாற்காலிக நிதி மந்திரி பதவி யேற்றுள்ளார். இதுதான் முடிந்தேறிய சாக்ளா விசாரணையின் விளைவு: முந்தரா விற்ற பங்குகளை, லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்பொரேஷன் வாங்கியது, கல்கத்தா ஷேர் மார்க்கெட் நிலவரத்தை ஒழுங்குபடுத்தும் பொதுநல நோக்கத்துடன் செய்யப்படவில்லை யென்றும், முந்தரா என்ற தனிப்பட்ட மனிதனின் சுயநலத்திற்காகவே நேர்மை யற்ற முறைகளில் நடந்தேறிய விவகாரம் என்றும் சாக்ளா சங்கையற முடிவு கட்டியுள்ளார். ஆனால் இம் முறைதவறிய நடவடிக்கைகளுக்கு யார் உத்தரவாதம் என்பதுதான் நிர்ணயிக்கப்படாத பிரச்னையாய் விடப்பட்டுள்ளது. உண்மையைக் கண்டு பிடிக்க நிருவப்பட்ட கமிஷனால் உண்மை கண்டு பிடிக்க முடியவில்லை. ஊழலென உலகறிந்ததை ஊழலென்று உறுதி கூற இவ்வளவு திறமை வாய்ந்த நீதிபதியின் அவகாசமும் திறமையும் இப்படி வீணாக்கப் பட்டிருக்க வேண்டாம். உண்மை புலப்படாததால், ஹேஷ்ய பூர்வகமாகவே சாக்ளா தீர்ப்பு கூற வேண்டிய தாயிற்று. இம்மாதிரி தீர்ப்பு சட்டப்படிக்குச் செல்லாது தான். ஆனால் சாக்ளா விசாரணை, சட்ட பூர்வகமான விசாரணையல்லவே! இம்மாதிரி கமிஷன்களை நிருவி, அம்மாதிரி முடிவு கூறச் செய்வதால்தான், பல சிக்கல்கள், அரசியலுலகிலும் சமூகத்திடையும் எழுந்து, அவ்வூழல்களை மழுப்பி மறைப்பதற்கான சாமர்த்திய சாதுர்ய ஊழல்கள் பலவற்றில் அதிகாரிகளின் அதிநுட்ப யுக்தி புத்திகளைப் பாய்ச்சி, மேலும் பல ஊழல்கள், நாட்டுள் மறைந்து வளரச் செய்கின்றன.

கார்பொரேஷன் தலைவர் ஸ்ரீ காமட்டும், மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ L. S. வைத்தியனாதனும், இன்வெஸ்டிங் கமிடியைக் கலவாது இந்த பேரத்தை முடித்தது பெரும் பிசகென சாக்ளா முடிவுகட்டி யிருக்கிறார். ஆனால், நிதி இலாகா பிரதம காரியதரிசி ஸ்ரீ H. M. படேலின் ஊக்கத்தினாலும் பரபரப்பினாலும், இவ்விரு கார்பொரேஷன் அதிகாரிகளும் மலைத்துப் போய்த் தமது கடமைகளை மறந்து, அன்னார் சொற்படி நடந்துவிட்டார்கள் என்று சாக்ளா ஊகிக்கிறார். அப்படியானால் ஸ்ரீ படேல் குற்றவாளியா யென்ற கேள்வியைத் தாமே கிளப்பிக்கொண்டு, அதைப் பற்றித் தான் தீர்ப்பு கூறவேண்டிய அவசியமில்லை யெனவும், அக்காரியதரிசியும், இது விஷயத்தை நிதி மந்திரி காதில் போட்டதாகக் கூறுவதால், நிதி மந்திரி, தனது

கீழதிகாரிகளின் செயல்களுக்குத் தானே பொறுப்பேற்றுத்தானக வேண்டுமென்றும் விளக்கி, மூந்தரா பங்கு பேர ஊழல் பொறுப்பை, நிதி மந்திரி தலையில் மூட்டை கட்டிப் போட்டுவிட்டார். இதுதான் சாக்ளா விசாரணையின் தீர்ப்பு.

இத் தீர்ப்பு வெளிவரு முன்னேயே நிதிமந்திரியாயிருந்த ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமது இக்கட்டான பதவியை ராஜீனமா செய்து நேருஜீக்குக் கடிதம் எழுதினர். ஆனல் நேருஜீயோ, சாக்ளா தீர்ப்பு வெளிவரு முன் ராஜீனமாவை அங்கீகரிக்க மறுத்து, அது வெளி வந்த பின்னர்தான், ராஜீனமாவை அங்கீகரித்து, நிதி மந்திரி பதவியைத் தார்க்காலீகமாகத் தானே ஏற்றுக் கொண்டுள்ளார். டி. டி. கே. நேருஜீக்கு எழுதிய கடிதமும் நேருஜி அதற்கு எழுதிய பதிலும் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. ஸ்ரீ டி. டி. கேயின் தியாகத்தால் ஜனநாயக அரசியலுலகில், இந்திய சர்க்கார் நடுநாயகமாய் விளங்கலாயிற்று என நேருஜீ பெருமிதப்பட்டு மகிழ்கிறர்.

சாக்ளா தீர்ப்பு லோக் சபையிலும் ராஜ்ய சபையிலும் விவாதிக்கப்பட்டாயிற்று. ஸ்ரீ டி. டி. கே, தான் ராஜீனமா செய்ய நேரிட்டதைப் பற்றி லோக் சபையில், சம்பிரதாயப்படி ஓர் அறிக்கை படித்தார். நடந்ததெதுவும் தனக்கு நேரிடையாகத் தெரிவிக்கப்படவில்லையென்றும், முந்திரா ஷேர்களை கார்பொரேஷன் வாங்கலாமாயென்று யோசிப்பதாக பராபரியாகத் தன் காதில் ஸ்ரீ படேல் போட்டதும், 'மூந்தராவுடன் விவகாரம் வைத்துக் கொண்டால் வெகு ஜாக்ரதையுடனிருக்க வேண்டும் என்று படேலைத் தான் எச்சரித்ததாகவும், அதற்குமேல் தன்னை எவரும் ஏதும் கலக்கவில்லையென்றும் ஸ்ரீ டி. டி. கே. கூறுகிறர். தான் அறிந்ததுகளையெல்லாம் விசாரணையில் வெளியிடச் சந்தர்ப்பம் ஏற்படாததாலும், தன்னைப்பற்றி இதரர் பேசியவைகளைத் தான் முடிவில் கண்டித்துப் பதிலளிக்கத் தனக்கு அவகாசம் கொடுபடாததாலும், மூந்தரா மர்ம உண்மைகள் முற்றிலும் இவ்விசாரணையில் அம்பலமாக்கப் படவில்லையாம்! அப்படிக்கிருந்தும், தனது சிப்பந்திகளது தவறுதல்களுக்குத் தானே பொறுப்பேற்பதே ஜனநாயக அரசியல் ஒழுங்கு என்ற சம்பிரதாயப்படிக்குத் தான் தனது பதவியினின்றும் விலகிக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

இரு சபையாளர்களும், சாக்ளா முடிவைப் பூருவாக அங்கீகரித்து ஏற்றுவிட்டனர். நேருஜியின் பிரேரபணை

18328

யின் பேரில். இவ்விஷயத்தில் பல ஊழல்கள் நடந்திருப்பது வாஸ்தவமென்றும், அததற்கு உத்தரவாதம் யாராரெனக் கண்டுபிடிக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுக்குமென்றும் நேருஜி உறுதி கூறி, மீண்டும் கமிஷன்களோ, கமிட்டிகளோ வேண்டியதில்லையென்றும் சொல்லியுள்ளார்.

ஆனல், சாக்ளா முடிவும், டி. டி. கே. ராஜினமாவும் பற்றி சபைகளில் நடந்த காரசாரமான விவாதத்தில் பல நூதன விஷயங்கள் பிரோஷ்காந்தி மூலமாகவும் ஸ்ரீ டாஞ்சே மூலமாகவும், ஸ்ரீ குன்ஸ்ரூவாலும் வெளிப்பட்டுள்ளன. உயர்தர சிவிலியன் அதிகாரிகளது நேர்மையும், சீர்மையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு நிற்கிறது. ஸ்ரீ படேலின் பதவி நிர்வாகமே பல ஊழல்களை யுண்டாக்கியுள்ளதென்றதோர் அபிப்பிராயம் பொதுமக்களிடை நிலவும் வகையில் இவ் விவாதங்கள் நடந்தேறியுள. லஞ்சம் வாங்கும் அதிகாரிகளுக்கு சிறை தண்டனை அவசியமென்ற சட்டம், சபையில் முந்தரா பேர விவாதத்துடன் நிறைவேறி யிருப்பதால், உயர் பதவியாளரது ஊழல்களை மத்திய சர்க்கார் எப்படிக் கணிசித்துத் தண்டிக்கப் போகிறார்களென்பதையே பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். மத்திய சர்க்காரின் உயர்தர சிப்பந்திகளினிடையே ஊழல் பேய் நடமாடி வருவதைக் காணும்படிக்கு இந்த விசாரணை சர்க்காரின் கண்களைத் திறந்ததுதான் நம் நாட்டின் அதிர்ஷ்டம். நிதி மந்திரி விலகிக் கொண்டது அவ்வளவு பெரிதல்ல. உயர்தரப் பதிவியாளர்களது ஊழல்கள் ஒழியவேண்டியதே நாட்டின் நலனுக்கு அடிகோலியாகும்.

இந்த நிலையில் முந்தரா என்னப்பட்டவர் மீது பல குற்றச் சாட்டுதல்கள் குவிந்து வருகின்றன. இவற்றின் காரணமாகச் சிறைபடுத்தப் பட்ட முந்தரா, தான் குற்ற மற்ற பரம வைதீகரென்றும், பூஜை புனஸ்காரங்களுக்கு கிணற்று ஜலமே வேண்டுபவரென்றும், ஆகார நியமம் கொண்டவரென்றும் கூறி, 'பெயில்' கேட்டார். கீழ்க் கோர்ட் மறுத்தபோதிலும், மேல்கோர்ட்டார், தகுந்த ஜாமீன் மீது இவரை வெளிவிட்டனர். இவரது விசாரணைகளால் இன்னமும் என்னென்ன ஊழல்கள் வெளிப்பட யிருக்குமோ! ஸ்ரீ படேல் மீது உத்தியோக முறைப் பாடான விசாரணை யுண்டாகும்போதும் உண்மையான ஊழல்கள் என்னென்ன வெளிவரப் போகின்றனவோ! எவ்வளவு ஊழல்கள் வெளிவந்தாலும் நாட்டிற்கு நலமே.

சுதந்திரம் பெற்றும் சுகம் பெறுது தவிக்கும் நோய்க்குக் காரணமான அதிகாரிகளது ஊழல்கள் யாவும் ஒரே காலத்தில் வெளிப்பட்டால்தான், அரசியல் உடல் சுத்தப் பட்டு சௌக்கியப் படும்.

முந்தராவுடன் செய்த பேரம், முந்தரா என்ற தனிப் பட்ட மனுஷ்யனை முன்வைத்துக் கவனிக்கப்படலாகாதென கார்பொரேஷன் அதிகாரிகள் செய்த வாதத்தை சாக்ளா ஒப்புக்கொள்ளாது மறுத்திருந்தும், நேருஜி, 'நடந்தது நடந்து விட்டது. முந்தரா விற்றதால், கார்பொரேஷன் வாங்கிய பங்குகள் பலனற்றதாகிவிடுமா? வாங்கியுள்ள பங்குகள் யாவும் நல்ல கம்பெனிகளதுதான். 'தங்கச் சுரங்கங்களே'. ஆகவே நாம் அவைகளை வைத்துக் கொண்டு நேர்ப்படுத்தி முன்னுக்கு வரலாம்'—என்று லோக் சபையில் முடிவு காட்டிப் பேசியுள்ளார்: 'நாயடித்த காசு குலைக்குமா', 'கொட்டிய பாலின் முன் குந்தியழு வாதன்?,' என்று நேருஜி சிந்திக்கிறுர் போலும்.

'பெருவிலை கொடுத்துச் சிறிது அறிவு வாங்கியுள் ளோம் இந்த சாக்ளா விசாரணை காரணமாக', என்று நேருஜி பெருமை பேசியுள்ளாரே லோக் சபையில்! 1950 வருஷத்தில் தற்காப்பு இலாகா ஸ்டோர் தளவா டங்கள் வாங்கிய பேர ஊழல்களை பற்றியும், ஜீப் அதீத விஷய ஊழல்களைப் பற்றியும், பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிடி யார் செய்யச் சொன்ன உயர் நிலை விசாரணைகள் ஏன் நடத்தப்படவில்லையென்றும், கடந்த எலெக்ஷனுக்காக காங்கிரஸ் நிதிக்கு ஒரு லக்ஷம் ரூபாய் முந்திரா விடம் காங்கிரஸ் கட்சியார் நன்கொடை பெற்றிருப்ப தாகவும் கூறப்படுவது உண்மைதானுவென்றும் சபை களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அரசாங்கப் பதில் என்ன? இதன் மர்மங்களும் பொதுமக்களறிய வெளிப் படுத்தப்படாத வரையில் அரசியல் ஊழல் வேருடன் களையப்படாது, எவ்வழியாவது உயர்தர வட்டாரங்களில் ஊன்றி வளரத்தான் செய்யுமென்பது சொல்லாமலே விளங்கும் உண்மையே! டால்மியாக்களும் முந்தராக் களும் இன்னமும் அரசியல் ஆல விருக்ஷத்தின் வேர்ப் புழுக்களாக நெளிந்து வளர விடப்படுவது நிச்சயமே. எல்லா ஊழல்களையும் ஒரே பாடாக வெளிப்படுத்தி அலசிச் சுத்தப்படுத்தி, சுதந்தர இந்தியாவை மனே வாக்குக்காய சுத்தமான திறன்கொண்ட பதவியாளர் வசம் இனியாவது ஒப்படைக்க ஈசன் அருள்வாராக.

## மதப்பற்றற்ற ========= ========= மஹானின் மறைவு

யூனியன் கல்வி மந்திரி, ஜனாப் மௌலானா அப்துல் கலாம் அஜாத் அவர்கள், 22-2-58 காலை 2-10க்கு மண்ணுலகு நீத்தது, இந்தியாவுக்கே பெரு நஷ்டம் என்பதற்கு ஐயமேயில்லை. உயர் குடும்பத்திலுதித்த உத்தமர்: ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு இடைவிடாது உழைத்த மதத் துவேஷமற்ற மத பக்தர். மனதில் படுவதைப் பயமின்றி வெளியிடும் உயர்தரவாதி. தன் இனத்தாரின் உயர்வுக்கும், நாட்டாரின் ஒருமைக்குமாகப் பல தியாகங்கள் செய்து, கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாது உழைத்த உண்மைத் தேசியத் தீரர். கல்வித் துறையில், உலகப் பிரயாணஞ் செய்து, அனுபவ காரணமாய் உத்தமக் கலைகளை உயர்தர வளர்த்திட ஊக்கங்கொண்ட பரந்த அறிவாளி. 69 வயது. இம்மகானின் மறைவு, இந்திய அரசியலுலகிற்கும், கல்வி யுலகிற்கும் ஈடுபடுத்தவொண்ணா நஷ்டமே. உயிருள்ளவரை உத்தம லட்சியங்களுக்கே உழைத்த அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

---

The following particulars regarding the ownership of the 'Jagan Mohini, the monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

**FORM IV**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | ... | Triplicane (Madras-5) |
| 2. | Periodicity of its Publication | ... | Monthly |
| 3 & 4. | Printer's & Publisher's | | |
| | Name | ... | V. M. Parthasarathy |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | 26, Car Street. Triplicane, Madras-5. |
| 5. | Editor's Name | ... | Mrs. V. M. Kothainayaki |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | 26, Car Street, Triplicane, Madras-5. |
| 6. | Names and addresses of individuals who own the newspapers | | do |

I, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**V. M. Parthasarathy,**
*Publisher.*

*Dated 1st March 1958*



### கலிகால ப்ரக்லாதன்

வெகு காலத்திற்கு முன் நடந்த ஒரு விஷயத்தை இப்பொழுது ஞாபகப் படுத்திக் கொண்டு எழுதத் துணிந்தேன். காந்திஜீ தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டிருந்தார். அக்காலத்தில் அவரைக் குறித்தும், அவருடைய இயக்கத்தைக் குறித்தும் பத்திரிகைகளில் செய்திகள் வருவதுண்டு. புதிய முறையில் பெரிய போராட்டங்களை நடத்துகிருர் அதிசய மனிதன் என்று செய்திகள் வருவதுண்டு. இரண்யனுடன் பிரஹ்லாதாழ்வார் போட்ட போராட்டத்தைப் போலவே இதோ! இந்த நூற்றுண்டில் நம் நாட்டிலிருந்து ஒரு பிரஹ்லாதாழ்வார் தென் ஆப்பிரிக்காவில் போராடுகிருர் என்று செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாகும். புராணக் கதையை மெய்ப்பிக்க வந்த புருஷோத்தமனைப் பாருங்கள் என்று பத்திரிகைகள் கூறும். இவை அவ்வளவையும் பத்திரிகைகளில்தான் படித்தோம். அந்த மஹா புருஷனையும் பார்க்கவில்லை. அவர் நடத்தின போராட்டத்தையும் பார்க்கவில்லை. ஆயினும் உள்ளம் மகிழ்ந்தது. நமக்கு அந்தக் காலத்தில் இரண்டு வகைகளில் சந்தோஷம். தென் ஆப்பிரிக்காவிலுள்ள கருப்பு மனிதர்களின் சுதந்திரத்திற்காக வெள்ளையர்களை எதிர்த்துப் போராட்டம் நடப்பதைக் குறித்து சந்தோஷம் ஒன்று. நம் நாட்டு மனிதர் ஒருவர் அந்தப் போராட்டத்தை நடத்துகிருர் என்பது மற்றொரு சந்தோஷத்திற்குக் காரணம். இவ்விரு சந்தோஷத்தைவிட அதிக சந்தோஷமளித்தது வேறொரு விஷயம். அது என்ன தெரியுமா? ஆங்கிலப் படிப்பைப் படித்துவிட்டு குட்டிச்சுவராகிவிட்டிருந்த அக்காலத்து மேதாவிகள் சிலர் புராணக் கதைகளை அவமதித்தார்கள். அந்த மேதாவிகள் வெட்கித் தலைகுனிய வேண்டிய வகையில் இதோ வந்தேன் என்று பிரஹ்லாதாழ்வானே தோன்றின மாதிரி வந்தார் காந்திஜீ. இந்த விஷயத்தை எண்ணி எண்ணி உள்ளம் குழைந்தது, மனம் குளிர்ந்தது எங்களுக்கு.

* * *

### எளிமையின் அவதாரம்

தென் ஆப்பிரிக்காவிலிருந்து சென்னைக்கு வந்தார் காந்திஜீ. அவரை சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் வரவேற்பதற்காக அந்தக் காலத்துப் பெரிய பெரிய அரசியல்வாதிகள் (அவர்களை மிதவாதிகள் என்று திலகர் கோஷ்டியினர் அழைப்பார்கள்) ஸ்டேஷனில் பூ மாலைகளுடன் காத்திருந்தார்கள். வண்டி வந்து நின்றது. முதல் வகுப்பு வண்டிகளையும், இரண்டாவது வகுப்பு வண்டிகளையும், துளாவித் துளாவிப் பார்த்தாகி விட்டது. காந்தியைக் காணோம்.

# என்னைக் கவர்ந்த காந்தி

ஸ்ரீ கே. சடகோபன்.

—❀ ❀ ❀—

அவர்களுக்குப் பெரிய ஏமாற்றம்! என்னசெய்வார்கள். பாவம்! ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தார்கள். அந்த நேரத்தில் 'காந்திக்கு ஜே!' என்று ஒரு குரல் எங்கிருந்தோ கிளம்பிற்று. எல்லோரும் குரல் வந்த திசை நோக்கிச் சென்றார்கள். மூன்றாவது வகுப்பு வண்டியிலிருந்து வடக்கு நாட்டு மிட்டாய் வாலாவின் தலைப்பாகை ஜிப்பா வேஷத்தில் வாமனவதாரம் போன்றவர் தம் சதியின் கரங்களை கெட்டியாகப் பற்றியவாறு இறங்கி நடந்து செல்வதைத் கண்டார்கள். சரி! இவர்தான் காந்தியாக இருக்க வேண்டும் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு, என்ன ஆயினும் ஆகட்டும் என்று மாலைகளை அவர் கழுத்தில் போட்டு விட்டார்கள். அந்த சமயத்தில் "அவரல்ல காந்தி. இதோ நான இருக்கிறேன்" என்று வேறு ஒருவர் வந்து நின்றிருப்பாராகில், அந்தப் பெரிய மனிதர்களின் உள்ளங்கள் என்ன பாடு பட்டிருக்கு மென்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! "தைரியமாக மாலைகளைப் போட்டார்கள்" என்று நான் எழுதியதற்குக் காரணம் இதுதான்.

பிறகு அந்த தம்பதிகளை "பீடன்" வண்டியில் ஏற்றி, குதிரைகளை அவிழ்த்து ஓட்டிவிட்டு நாங்கள் இழுத்துச் சென்றோம். சென்னை நகரத்தில் 'காந்திக்கு ஜே!' என்ற குரல் அன்றே முழங்கத் துவங்கிவிட்டது. அன்று முழங்க ஆரம்பித்த அந்தக் குரல் இன்றும் முழங்குகிறது. என்றும் முழங்கும்.

*　*　*

## உபதேச ஆசான்

என்னையும் என் போன்ற சின்ன, பிஞ்சு உள்ளங்களையும் அன்றைக்கே காந்திஜீ வசீகரித்து விட்டார். அவரைப் பார்த்தோம். அவர் திருவடிகளைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டோம். அவரை வண்டியில் எழுந்தருளச் செய்து வண்டியை இழுத்துச் சென்றோம். மெய் மறந்தோம். அந்த நேரத்தில் என் உள்ளமும் களவுபோயிற்று. பிருந்தாவனத்தில் ஆயர் சிறுமிகளின் உள்ளங்களை களவாடிவிட்டான் கண்ணன். அதுபோல் எங்கள் உள்ளங்களையும் காந்திஜீ களவாடிவிட்டார். அன்று எங்கள் உள்ளங்களில் படர்ந்து புதர்களாக இருந்த சிறுபிள்ளைத் தனங்களெல்லாம் தீயில்பட்ட தூசு போல் மாய்ந்தன.

*　*　*

படிப்பு வேண்டாம். பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறுங்கள். கலாசாலைகளை விட்டு வந்துவிடுங்கள் என்று சொன்னார் அந்தப் புரட்சித் தலைவர். "இது என்ன அநியாயம்" என்றார்கள் பெற்றோர்கள்.

இந்த கல்வியினல் பிள்ளைகளின் உள்ளம் கெட்டுவிடும். என்னுடன் வாருங்கள், மெய்ஞானப் பொருள் உபதேசம் செய்வேன் என்ருர். அவர் சொல் கேட்டு அவருடன் சென்றவர்கள் ஏமாந்து போகவில்லை. பாரதப் பண்பாட்டைப் பிழிந்து ரசத்தை பருகச் செய்துவிட்டார் மகானுபாவன்.

* * *

**சுதந்திர ரதம்**

அவர் புரட்சித் தலைவர். அடிமைப்பட்ட நாட்டு மக்களின் மனங்கள் முட்புதர்களும், விஷப் பூச்சிகளும், கொடிய விலங்குகளும் நிறைந்த பயங்கர வனத்தைப் போல இருந்தன. மக்கள் தன்மானமற்று வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட வனத்தை அழித்து பண்படுத்த முயன்ருர்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்ற பல மஹான்கள். அந்த பரம்பரையில் வந்த காந்திஜி உபதேசம் செய்வதுடன் நிற்கவில்லை. புரட்சி, புரட்சி என்று சிங்கம் போல் கர்ஜித்தார். சுதந்திர தாகம் என்னும் வண்டிக்கு, சமுதாயச் சீர்திருத்தங்களைச் சகடங்களாக்கினர். திருவாலூர் தேர் ஓடுவதுபோல் இருந்தது காந்திஜி ஓடவிட்ட ரதமும்.


* * *

**உயர்வர உயர்நல முடையவன்**

சாத்வீக முறையில் புரட்சி செய்து, பிறர் ரத்தம் சிந்தாமல் போராடி சுதந்திரத்தைப் பெற்ற விந்தையை உலக சரித்திரத்தில் எந்நாளும் கண்டதில்லை, கேட்டதில்லை. இந்த விந்தையைச் செய்து காட்டிவிட்டு மறைந்தார் அண்ணல். அவருடைய படையில் இருந்தவன் நான்.

காந்திஜீயின் சுயரூபம், கீர்த்தி, சக்தி ஆகிய குணங்கள் கடல் போன்றவை. கடுகைத் துளைத்து அதனுள் கடலைப் புகுத்த முடியாது. "உயற்வற உயர் நலமுடையவன் அவன்" என்று சொல்லி முடித்துவிடுகிறேன்.

---



எஜமானன்:- ஏம்பா! நீ இதற்கு முன் என்ன வேலை செய்துகொண்டிருந்தாய்?...

வேலையாள்:- பால் வியாபாரம் செய்துகிட்டிருந்தேனுங்க...

எஜமானன்:- ஓஹோ! அதுதானே பார்த்தேன். வியாபாரபழக்கத்தால்தான் செடிகளுக்கு தாராளமாகத் தண்ணீர் கொட்டுகிருயா?...

# பாரதப் பூங்கா

**வசுமதி ராமசுவாமி**

★

உலகத்தில் பாவமும், சாபமும் ஆசையினுல்தான் ஏற்படுகின்றன. அந்த ஆசைக்கு மூல பொருளாக இருப்பது பெண்ணும், பொன்னும்தான். சுக்ராச்சாரியாருடைய பெண் தேவயானியை யயாதி மணக்கிருன். பாண்டவர்களின் முன்னோர்களில் யயாதி ஒருவன். தேவயானி அறியாமல் அரசன் மகள் சர்மிஷ்ட்டையையும் மணந்து கொள்ளுகிருன். இதனுல் முனிவர் சாபத்திற்கு ஆளாகி நடு வயதில் மூப்பை அடைகிருன்.

மகான்கள் வாயினுல் சாபம் வாங்கிக் கொள்ளுவதும் நன்மையில் முடியும். ஏனெனில் சாபம் எனறு ஏற்படும்போது அதற்கு விமோசனமும் அவர்கள் அளித்து விடுகிருர்கள். நாமாக செய்யும் பாவம் வேறு, அறியாமையினுல் வரும் சாபம் வேறு. பாவம் காலமாகி தேய வேண்டும். யயாதி சாபத்தை கேட்டு கலங்கி விமோசனம் கோருகிருன். அவர் உன் கிழத்தனத்தை உன் பிள்ளைகளில் யாராவது விரும்பி பெற்றுக்கொண்டால் நீ உன் யௌவனத்தை அடைவாய் என்று அருளுகிருர்.

பிள்ளைகள் நான்கு பேரும் மறுக்கிருர்கள். கடைசிப் பிள்ளை புரு மனப்பூர்வமாக தந்தையின் மூப்பை பெறுகிருன். யயாதியின் ஆசைப் பேயை வெறுக்கிருேம். புருவின் தியாகத்தை நினைத்து ஆதரிக்கிருேம். வெகு காலம் ஆன பிறகும் யயாதிக்கு ஆசை அடங்கவில்லை. மனம் நொந்து பிள்ளையிடம் மூப்பை திருப்பி பெறுகிருன். பீஷ்மரைப் போல் புருவும் சிறந்த தியாகியாக வேறு விதத்தில் விளங்குகிருன்.

சின்ன பையன்கள் தெரியாமல் தட்டாரப் பூச்சியைப் பிடித்து துன்புறுத்துகிருர்கள். சில குழந்தைகள் ஊறும் எறும்பைக் கையால் நசுக்கி கொன்று விளையாடுகிருர்கள். இவைகளெல்லாம் அறியாமல் செய்தாலும்பாவம்என்று ஆன்றோர்கள் வகுத் திருக்கிருர்கள். இன்று எல்லோரும் மீன், முயல், கிளி இவைகளை பிடித்து அடைத்து வைக்கிருர்கள். இவர்களுடைய சந்தோஷமான பொழுதுபோக்குக்காக வளர்க்கிருர்கள். மற்ற ஜீவன்களுடைய உணர்ச்சியைப்பற்றி சிந்திப்பதில்லை.

ஒரு திருடன் அரண்மனையில் விலைமதிப்புள்ள பொருள்களைத் திருடி விடுகிருன். அவனை காவலாளிகள் துரத்திக்கொண்டு வருகிருர்கள். மாண்டவ்ய மகரிஷி தவத்தில் இருக்கிருர். திருடன் ஆசிரமத்தில் பொருளை எறிந்துவிட்டு ஓடுகிருன். காவலாளிகள் இந்த ரிஷிதான் திருடிவிட்டாரென்று அரசனிடம் சொல்லி விடுகிருர்கள். அரசனுக்கு, திருட்டு தொழில் செய்வதுடன் வெளிக்கு வேஷம் போடுகிருரே யென ஆத்திரமாக வருகிறது. சூலத்தில் மகரிஷியை ஏற்றச் சொல்லுகிருன். மகரிஷி யோகத்தில் இருப்பதால் உயிர் நீங்கவில்லை. அன்ன ஆகாரமின்றி உயி

ரோடு இருப்பதைப் பார்த்து மக்கள் அதிசயப்படுகிருர்கள். இந்த செய்தியைக் கேட்டு அரசன் உண்மையை உணருகிருன்; ரிஷியிடம் மன்னிப்பு கோருகிருன்.

மகரிஷி தனக்கு இந்த தவறு எப்படி நேர்ந்தது என்று தர்ம தேவதையை கேட்கிருர்.

தாங்கள் பக்ஷிகளேயும், வண்டுகளேயும் பிடித்து துன்புறுத்தி இருக்கிறீர்கள்.

"எப்பொழுது?"

அறியாப் பருவத்தில் பாவம் சிறியதானுலும் தண்டனை பெரிது.

மகரிஷி தர்மதேவதையிடம் கோபம் கொண்டு "நீ மானிடப் பிறவியாக பிறக்கக் கடவது" என்று சாபம் அளித்துவிடுகிருர்.

அம்பாலிகையின் வேலைக்காரியின் பிள்ளையாக தர்ம தேவதை பிறக்கிருர். அது தான் விதுரர். விதுரர் தர்ம சாஸ்த்திரம் தெரிந்த மேதையாக விளங்குகிருர்.

இந்தக் கருத்தைத்தான் பின்னுல் நடந்த ராமதாஸ் என்ற கதையிலும் சொல்லப் படுகிறது. கோபண்ண பனிரெண்டு ஆண்டுகள் சிறையில் தவிக்கிருன். அவன் செய்த தவரு அரசனின் பணத்தை எடுத்து ராமருக்கு கோவில் கட்டியதுதான். முள்ளும் "கல்லும்குத்துகிறது.'ராமாஉனக்கு இவ்வளவு செய்தேனே என்னே வதைக்கிருயே. சீதாம்மா நீயாவதுசொல்லேன்" என்று கதறுகிருன்.

சீதாதேவிக்கு ராமரின் அழுத்தத்தைக் கண்டு சினம் பொங்குகிறது. "இப்படிக்கூட உண்டா? பக்தனே உடனே சென்று விடுவியுங்கள்" என்கிருள் தேவி.

ஆயிற்று பனிரெண்டு வருஷம். பூர்த்தி ஆகணுமென காத்திருந்தேன்.

"ஏன் நம்மை பூஜித்ததற்குப் பலனு?"

"முன்பிறவியில் ஒரு கிளியைப் பனிரெண்டு நிமிஷம் கூட்டில் அடைத்திருக்கிருன். அதற்கு இந்தத் தண்டனே" என்ருர் ராமபிரான்.

இந்தக் கதையில் எது உண்மை என்பதை ஆராய்ச்சிக் காரர்களுக்கு விட்டுவிடுவோம். மற்றஜீவன்களேபகுத்தறிவுள்ள மனித வர்க்கம் துன்புறுத்தக் கூடாது என்ற உயர்ந்த கருத்தை மகாபாரதக் கதை சொல்கிறது.

* * *

## அடைமொழி அன்பர்

**ரத்னம்:**- மஞ்சள் வாங்க கடைக்கு போனேன்... அங்கு மஞ்சுளாவை பார்த்தேன்...

**ரங்கன்:**- (கிண்டலாக) அடாடா உன்பிஞ்சுநெஞ்சுமிஞ்சிபோச்சோ!

**ரத்னம்:**- அடச்சீ பஞ்சையே... அவளே யாருன்னு பார்த்தே? என் பெண்சாதி. என் கடைக்கு வர்தேன்னு ஒரு போடு போட்டேன்.

**ரங்கன்:**-......?

# அவனே கடவுள்!

P. S. அரவிந்தா

வருடங்கள் சில ஓடி மறைந்துவிட்டன. எனினும் அந்த குருடனின் தோற்றத்தை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. இயற்கையிலேயே நான் சற்று முன் கோபி என்று பெயர் பெற்றவன்தான். இருப்பினும் கடுமையான இரும்பு நெஞ்சம் படைத்தவன் இல்லை. என் தலைவிதியின் விளையாட்டினாலோ என்னவோ அன்று நான் கொடிய கல்நெஞ்சனாகவே மாறிவிட்டிருந்தேன். அந்த சமயம் நான் மனிதனாகவே நடக்கவில்லை என்பதை பிறகுதான் உணர்ந்து வருந்தினேன். என்னுடைய தலைவிதியின் சூழ்நிலை என்னை அப்படிச் செய்துவிட்டதே ஒழிய நானாக ராட்சஸனாய் மாறிவிடவில்லை. சாந்தமூர்த்தி என்ற என் பெயருக்கேற்ப பெரும்பாலும் சாந்தமாகத்தான் இருப்பேன். ஆனால் அப்பொழுது என்னை யாராவது பார்த்திருந்தால் ருத்திரமூர்த்தி என்று சடக்கெனச் சொல்லிவிடுவார்கள்.

இரண்டு நாள் அசௌகர்யத்தினால் ஆபீஸ் போகாததன் விளைவு ஒரு சுமை ஆபீஸ் கட்டுகள் என்னை விரைக்க விரைக்கப் பார்த்து கண் சிமிட்டிக் கொண்டு இருந்தன. எப்படியும் இன்று வேலைகளை ஒருவாறு முடித்துக்கொண்டுதான் ஆபீஸ் படியை ஏற வேண்டும் என்று கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்தேன். இவ்வளவையும் ஆபீஸ் போவதற்குள் பார்த்தாக வேண்டுமே என்ற அவசரம் கோபம் கோபமாய் வந்தது. கட்டை கையில் எடுத்தேனோ இல்லையோ எதிர் வீட்டில் யாரோ "அசக்" என்று தும்பினார்கள். என் கோபம் எல்லை மீறியது. "சீ; தரித்திரங்கள்; இன்று வேலை முடிந்தாற்போல்தான் அஸ்து தேவதை போல் எடுக்கும் போதே தும்பி தொலைக்கிறார்கள்; சனியன்" என்று முணுமுணுத்தவாறே கட்டை பிரித்தேன். இரண்டு வரிக்கூடப் பார்த்திருக்க மாட்டேன். என் தர்ம பத்தினி உமா உள்ளே பிரவேசித்தாள். வந்தவள் சும்மா விடுகிறாளா, என்ன? "அழகாய்த்தான் இருக்கிறது, இரண்டு நாள் ஜுரம் வந்து படுத்துக்கொண்டிருந்தீர்கள். இன்று, வீட்டைக் கவனிக்காது காலங்கார்த்தாலே கட்டுகளைப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்தால் என்ன காரியம் ஆகுமாம். வீட்டில் உப்பு இல்லை; புளி இல்லை; பருப்பு இல்லை; கட்டை இல்லை; ஒன்றும் இல்லை; விடிந்தால் உங்க அம்மா திவசம். பிராமணனுக்குச் சொல்லவில்லை. வாத்தியாருக்குச் சொல்லவில்லை. முதலில் வீட்டில் சாமான்கள் வாங்கிப் போட வேண்டாமா? இப்படி ஒருத்தர்ஒருத்தர்ஓர்மூலையைப் பார்த்துஉட்கார்ந்துஇருந்தால் காரியம் தானாய் ஆகிவிடுமா?"

"ஏம்மா...பரதேவதே! உன் இல்லை பாட்டு முடிந்துவிட்

டதா; அதற்குக்கூட முடிவில்லையா! இன்னும் ஏதேனும் பாக்கியிருந்தால சொல்லிவிடு;"—என்று ஆத்திரத்தோடு கேட்டேன்.

"ஆமாம். நான் சொல்வது தானே தெரிகிறது. நீங்கள் செய்யும் காரியம் ஒன்றுகூட முழுசு கிடையாது. பெண்ணும் பிள்ளையும் பெற்றுவிட்டால் போதுமா; படைக்க வழி தெரிய வேண்டாமா! பிள்ளை வீட்டாரிடமிருந்து பதிலே இல்லை. நம் அக்கரைக்கு நாம்தான் கடிதம் எழுதித் தொணப்ப வேண்டும். குதிரை குதிரையாய்ப் பெண்களை எத்தனை நாள் வைத்துக் கொள்வது. ஆச்சு. இன்று சாயங்காலமே உங்க அக்கா வரப்போகிறாராம். இரண்டு நாள் முந்தியே சேசியிடம் திவசத்திற்குப் போய் புடவை வாங்கிக் கட்டிக் கொண்டு வரப்போகிறேன்; என்று சொல்லியனுப்பியிருக்கிறாள். மூன்று வருடமாக புடவை வாங்கித் தரவில்லை என்று முணகிக் கொண்டு இருக்கிறாள். இந்த தடவை ஒரு புடவை வாங்காவிட்டால் உங்களை விடமாட்டாள். இன்னும் புடவை வேறு வாங்கவேண்டும்"—என்று இரைந்தாள்.

"இதோபார்! உமா; உனக்கு வேண்டியது சாமான்கள் தானே? அது தானாய் வந்து சேருகிறது. இந்த வேலை இன்று முடியாவிட்டால் நான் ஆபீஸ் படி மிதிக்கமுடியாது. இன்று இன்ஸ்பெக்டர் வருகிறான். ஞாபகமிருக்கட்டும். தயவுசெய்து போம்மா..."

"ஆமாம். உங்க ஆபீஸில் இன்ஸ்பெக்டர் வராத வேளை யேது; வேலை அதிகம் இல்லாத நாள் எது? எப்பொழுதும் இதே ரோதனைதான். சாமான்கள் நாளை காலை வாங்கி வரலாம் என்று யோசனையா?"—என்று அவள் வழக்கப்படியான வார்த்தைகளை கொட்டிக் கொண்டு இருந்தாள்.

என் நிலை தெரிந்தால் அப்படிக் கேட்பாளா? எனக்கு வந்த கோபத்தில், "உமா! நீ என்ன விளையாடுகிறாயா? நீ வாயை மூடிக்கொண்டு போகிறாயா? இல்லையா?"—என்று அதட்டலாக இரைந்தேன். அதே சமயம் என்னுடைய அதி மேதாவியான மாணிக்கப் பயல் பிரம்மாண்டமாய் ஒப்பாரி வைத்துக் கொண்டு உள்ளே வந்தான். பிள்ளைக்கு என்ன ஆபத்து வந்துவிட்டதோ என்று பதறிக்கொண்டு உமா ஓடி அழைத்துக் கொண்டு வந்தாள். அம்மாவைப் பார்த்த மகன், ராகம், தாளம் பல்லவி எல்லாம் போட்டு இன்னும் பிரமாதமாய் அழத் தொடங்கி விட்டான். கடைசியில் பார்க்கப்போனால் பையன் பரீட்சையில் 'கோட்' வாத்தியம் வாசித்தது ஒரு புறம் இருக்கட்டும். அதை அவன் சிநேகிதர்கள் எடுத்துச்சொன்னது தான், அவனாலும், உமாவாலும் தாங்க முடியவில்லை. என் பிள்ளையைத் தரதர வென்று இழுத்துக்கொண்டு வந்து என் முன்னே நிறுத்தி, "கேட்டீர்களா? குழந்தை ராவும், பகலும் வாசித்து கஷ்டப்பட்டு பரீட்சை எழுதி

யிருக்கிறான். வேண்டுமென்று போக்கிரிப் பயல்கள் "நீ கோட்ரா" என்று பரிகாசம் செய்கிறார்களாம். அவனுக்குப் பள்ளிக்கூடம் போய் விசாரித்துக்கொண்டு வர வெட்கமாய் இருக்கிறதாம், அழுகிறான். போய் அந்த சோதாப் பையன்களையும் நாலு அறை அறைந்துவிட்டு பள்ளிக்கூடத்தில் விசாரித்துக் கொண்டு வாருங்கள்" என்றாள்.

எனக்கு ஏற்கனவே இருந்த கோபம் இன்னும் மூண்டது. "அம்மா! உன் பிள்ளை பெருமை உன்னோடு இருக்கட்டும். பிள்ளை 'கோட்' வாத்தியம் வாசித்து விட்டான் என்று எனக்கு நேறறே தெரியும். ஒரு நாள் முன்னால் சொல்லி இந்த அழுகையை விலை கொடுத்து வாங்க வேண்டாமென்று சொல்லவில்லை. பிள்ளைக்கு இன்னும் செல்லம் கொடுத்து தலையில் உட்கார வைத்துக்கொள். இருபத்தைந்து வயதிற்குள் எஸ்.எஸ்.எல்.ஸி. கட்டாயம் வந்துவிடுவான். எனக்கு வேலையாக வேண்டும். போங்கள்...போங்கள்..." என்று சீறி விழுந்தேன். அந்த வேளைக்கு முதல் பைலில் இரண்டு தாள்கூட முடிக்கவில்லை. இதற்கிடையில் என் இன்னொரு பையன் தபாலாபீஸ் சென்று என்பெயருக்கு வந்திருந்த இரண்டு கவர்களைக் கொண்டுவந்து கொடுத்தான். கவரைப் பிரிக்கும் முன்பே உமா அங்கு ப்ரஸன்னமாகிவிட்டாள். அவள் ஆத்மா எல்லாம் அன்றைய தபாலின் மேல்தான் அடித்துக்கொண்டு இருந்தது. என்னுடைய புத்ர காமேஷ்டி யாகபலனாய்ப்பிறந்த அரை டஜன் பெண்களில் அப்போதுதான் சுக்லாம் பரதரம் கொட்டி என் மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாய் கொண்டிருந்தது. நான் ஆயிரம் ரூபாய் வரதட்சிணை கொடுப்பதாயும், கல்யாணத்தை நிச்சயம் செய்து விடும்படி சம்பந்திக்கு எழுதிய கடிதத்திற்கு அன்று பதில் வரும் நாள். அதனால்தான் பாவம், உமா! என்ன பதில் வருமோ? என்று ஆவலுடன் ஓடிவந்தாள். முதலில் கையில் வந்த கவரைப் பிரித்துபடிக்க தொடங்கினேன். அது என் அக்காவிடமிருந்து வந்த கடிதம். உமாவும் கேட்கட்டும் என்று உரக்கவே படித்தேன்.

அன்புள்ள,

தம்பி சாந்தமூர்த்திக்கு ஆசீர்வாதங்கள். உபய குசலம். ஒரு வாரமாய் உன் அத்திம்பேர் ஜுரமாய் படுத்துக்கொண்டு இருந்தார். இந்த ஜுரத்தில் அவர் உடம்பு ரொம்ப பலஹீனமடைந்து விட்டது. டாக்டர், கட்டாயம் எங்காவது ஒரு மாதம் இடம் மாறி இருக்க வேண்டும் என்கிறார். எனக்கு உங்களைத் தவிர வேறுயார் இருக்கிறார்கள். அவர் உடம்பைப் பார்த்தால் நன்றாய்த் தேறி குணமானால் போதுமென்று இருக்கிறது எனக்கு. அதனால் இன்று சாயங்

காலவண்டியில் நான் குழந்தைகளையும் அவரையும் அழைத்துக் கொண்டு வருகிறேன். ஸ்டேஷனுக்குக் கட்டாயம் வா. உமாவுக்கு என் ஆசி.

இப்படிக்கு,
உன் பிரிய சகோதரி
அம்புஜம்.

இதைப் படித்ததும் எனக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. நானே பசங்களை வைத்துக் கொண்டு திண்டாடும்வேளை. இன்னும் ஆறு டிக்கட்டுகள் வந்தால் எப்படிச் சமாளிப்பது. அதிலும் நோயாளி வேறு. எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று நினைக்கும்போதே என் தலை ஒரேயடியாய் சுழன்றது. எனக்கு மேல் உமா இடிந்து உட்கார்ந்தே விட்டாள். அவளால் நிற்கக்கூட முடியவில்லை.

ஐயோ ராமா! நாம் ஒன்று நினைத்தால் அது ஒன்றாய் நடக்கிறதே. ஏதோ குடியில் வந்த பெண் எப்படியாவது இந்த வருடம் ஓர் புடவை வாங்கித் தந்துவிடலாம் என்று பார்த்தால் புதைபாணத்தைப்போல் ஒரு மாத "டிகாணு" என்று கடிதம் வந்து விட்டதே. அட கடவுளே! எப்படி இவர்களை வைத்து ஒரு மாதம் சமாளிப்பது? என்பாடு இப்போதே அலறலாய் இருக்கிறதே. அதுக்கென்று வந்து ஒரு மாதம் இருந்தால் இவளுக்கு, குழந்தைகளுக்குத் துணி மணிகள், புடவைகள் எல்லாம் எவ்வளவு பிடிக்கப் போகிறதோ! எங்காவது இருநூறு ரூபாய்க் கடன் வாங்கினால்தான் இந்த மாதம் தள்ள முடியப் போகிறது. "இதோ பாருங்கள். எனக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றுகிறது. இங்கு நம் குழந்தைகள், பெரியவர்கள், எல்லாரும் சேர்ந்துவிட்டால் ரொம்ப திண்டாட்டமாகிவிடும். அதனால் நான் குழந்தைகளை அழைத்துக் கொண்டு என் பிறந்தகத்திற்குப் போகிறேன். உங்க அக்கா வந்து இங்கு இஷ்டம்போல் ஒரு மாதம் இருந்துவிட்டுப் புடவையும் வாங்கிக் கட்டிக்கொண்டு போகட்டும். சரிதானா?"

"அப்பாடி. எப்பேர்ப்பட்ட யோசனை. அபார மூளை, உமா. நீ எப்படி உன் நாத்தனாருக்குப் பயந்து உங்க அண்ணா வீடு போகலாம் என்கிறாயோ, அப்படித்தான் உன் மன்னி உன் வரவைப் பார்த்து உருட்டி அடித்துக்கொண்டு பிறந்தகம் ஓடப் பார்ப்பாள். நீ எப்படி நாத்தனாரை வரவேற்கிறாயோ அப்படித்தான் உங்க மன்னி வரவேற்பாள். பிறகு ஒவ்வொரு மன்னியும் ரயில் வண்டிபோல் நாத்தனார்கள் வரவைப் பார்த்துப் பயந்து பிறந்தகம் ஓடிக்கொண்டேயிருக்க வேண்டியதுதான். வசனம் ஒன்றுசொல்வார்கள்: "அப்பாருக்கிட்ட கப்பரை ஆலைச்சுவற்றில் கவிழ்ந்திருக்கு." அதுபோல் நீ எவ்வளவு மரியாதை தருகிறாயோ அந்த மரியாதைதான் உனக்கு கிடைக்கும். பாவம்! வந்து விட்டுப் போகட்டும். மாப்பிள்ளை என்று மரியாதை வைத்து விருந்து தடபுடல் ஒன்றும்செய்யவேண்டாம். நாம் சாப்பிடும் கூழோ, கஞ்சியோ, குடித்து

விட்டுப் போகட்டும். அவ்வளவு தான். இதையே நினைத்து நினைத்துப் பார்த்தால் பயம் தான் வாட்டும். இதோடு விட்டு விடு.''

ஏற்கெனவே எனக்குக் கோபம் பொறுக்கமுடியவில்லை. எரியும் அடுப்பில் எண்ணெய் வார்த்தாற்போல் இன்னும் என் ஆத்திரத்தைக் கிளப்புகிறதே. அது-அது தலைவிதிப்படி திண்டாடிவிட்டுப் போகிறோம். இந்த அழகான கவரையும் பார்த்து விடுகிறேன் இரு'' என்று மற்றொரு கவரை உடைத்தேன். விஷயத்தைப் படித்ததுதான் தாமதம். என் உடல்ஒரேயடியாய்எரியத்துடங்கியது. சாக்ஷாத் ருத்ர மூர்த்தியவதாரமே எடுத்துவிட்டேன். எனக்கு மாத்திரம்!நெற்றிக்கண் இருந்திருந்தால் சிவன் எப்படி மன்மதனை எரித்தாரோ அது போல் பிள்ளை விட்டார் என்று பெயர் வைத்துக் கொண்டு திண்டாடும் அந்தப் பேராசைப் பேய்களை அப்படியே எரித்து விட்டு இருப்பேன். அதற்குத் தான் எனக்கு மூன்றாவது கண் இல்லையே.

என் தாண்டவத்தைப் பார்த்த உமா ஒன்றும் புரியாது, ''என்ன இப்படித்துள்ளுகிறீர்களே? எங்க அம்மா அப்பாவுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிட்டதா? இல்லை என் தமையனுக்கு ஏதாவது விபத்தா? விஷயத்தைச் சொல்லித் துலைத்து விட்டுக் குதியுங்களேன். எனக்கு என்னவோ செய்கிறதே' என்று பதறியவாறு கேட்டாள்.

''அம்மா தேவி! ஒருவனுக்கும் ஒரு ஆபத்தும் இல்லை. ஒருவர் எழவையும் எடுக்கவில்லை. பிள்ளை வீட்டுப் பிச்சைக்காரப் பேய்கள் வெறும் பேய்கள் இல்லை; கொள்ளிப் பேய்கள்; இருக்கிறார்களே; அவர்களுக்கு நாம் கொடுக்கும் ஆயிரம் ரூபாய் போதாதாம். இன்னும் என்ன என்ன வேண்டுமென்று ஜாபிதா போட்டிருக்கிறார்கள். நீயே படித்து பார்த்துக்கொள்'' என்று கடிதத்தை வீசி எறிந்தேன். வரதட்சிணை 2500 ரூபாய்; வெள்ளிப் பாத்திரம் 2000 ரூபாய்; எவர்ஸில்வர் 1000 ரூபாய்; பித்தளை 500 ரூபாய்; போக வர ரயில் சார்ஜ் 500 ரூபாய்;கெடியாரம், செயின் என்று ஏதேதோ அடுக்கிப் பெரிய ஜாபிதா தயார் செய்திருந்தார்கள், அந்தச் சீர் வரிசைஎன்னைப்போல் ஒருவன் செய்தால் அடுத்த நாளே தெருவில் பிச்சை தான் எடுக்க வேண்டும்.

இதைப்படித்த உமா,''அடப் பீடைகளே! போக வர ரயிலுக்குக்கூட இல்லாத அஷ்ட தரித்திரங்களுக்கு இத்தனை அமுத்தலா; ஒழியட்டும். என் பெண்ணைக் கல்யாணம் ஆகாத கன்னியாகவே வைத்துக் கொள்கிறேன்'' என்று எனக்கு எதிர் தாண்டவம் ஆடினாள். சிவன் பார்வதிகூட அந்த சமயம் எங்கள் எதிரில் போட்டியிட்டு இருக்க முடியாது. இது எல்லாம் போதாது என்று இந்தச் சந்தர்ப்பத்தித் என்னோடு ஆபீஸில் கூட உத்யோகம் பார்க்கும் புண்ணியவான் ஒருவனுக்கு அவசரமாய் 25 ரூபாய் வேண்டுமென்று பிள்ளையார்போல் வந்து உட்கார்ந்தான். என் கோபம் கட்டுமீறியது. (தொடரும்)

# திருந்தியது எப்படி?

டி. எஸ். ராஜகோபாலன், பி.ஏ., எல்.டி.

★

எவர் வைஷ்ணவர், அதாவது இறைவனுக்கு அடியார் எனக் கருதத் தகுந்தவர் என்பதைத் தக்க காந்தியடிகள் வகுத்துக் காட்டியுள்ளார். சமூக ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இத்தகைய நன்னெறி இன்றியமையாததென்பது உலக மக்கள் யாவரும் ஒப்புக் கொண்டதாகும். வைஷ்ணவருக்கு வேண்டிய அருங் குணங்கள் யாவை என்பதை நமது முன்னோர்கள் உபதேசித்தும் தாமே நடத்திக் காட்டியுமுள்ளனர். முக்கியமாக ஒருவரோடொருவர் பழகும்போது மனத்துக் கொள்ள வேண்டுவது யாதெனில் ஆச்சான் பிள்ளை என்ற பெரியவர் பின்வருமாறு உபதேசித்துள்ளார்: "ஒரு வைஷ்ணவனோடே ஸஹவாஸம் பண்ணும்போது அவனுடைய குண தோஷங்கள் இரண்டும் நிரூபிக்க வேண்டும். நிரூபிக்கிறது, குணங் கண்டு ஸ்துதிக்கவும், தோஷங் கண்டு தூஷிக்கவுமன்று; நாமே கைவிடுகைக்கும் பற்றுகைக்கும்." இவரது பொன்மொழியைக் கேட்டே இருவர் திருந்திய வகைக்குப் பின்வரும் வரலாறு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அன்பில் அணையார் என்பவரும் திருவெள்ளறைப் புண்டரீகர் என்பவரும் ஆருயிர் நண்பர்கள். இருவரும் வடமொழியிலும் தென்மொழியிலும் ஆற்றல் வாய்ந்தவர்; ஆஸ்திக சிகாமணிகள். இவர்கள் இருவரும் தவறாமல் வாரம் இருமுறையாவது ஸ்ரீரங்கத்திற்கு வருவார்கள்; உற்சவ காலங்களில் ஒரே இடத்தில் தங்கிச் சிறிதேனும் இணைபிரியா திருப்பார்கள். எப்போது, எந்த இடத்தில்சேரவேண்டுமென்று தம்மகுள் தீர்மானஞ் செய்து கொண்டு அதே இடத்தில் கூடுவார்கள். இவர்களுள் ஒருவர் வருவதற்குச் சிறிது தாமதமாயினும், அவர் வருமளவும் மற்றவர் காத்திருந்து அவர் வந்த பிறகுதான் கோயிலுக்குள் செல்வார்; அவர் வருகையை நெடுந்தூரத்திலிருந்து பார்த்து, தேசாந்தரத்திலிருந்து திரும்பும் மகனைக் கண்டு தகப்பன் அன்பும் ஆர்வமும் தோன்ற விரைந்து எதிர்கொள்வது போல், வேகமாகச் சென்று, "அடியேன் ராமாநுஜ தாஸன்! ஏன் இன்று இவ்வளவு தாமதம்?" என்று கீழே விழுந்து வணங்குவார். மற்றவரும், "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா" என்பதற்கிணங்க, அவரைக் காணும்போதே தண்டனிட்டு, "சிறிது தாமதமாயிற்று, பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்பார். இவர்கள் தங்கள் தங்கள் குடும்ப நலன்களை விசாரித்துக் கொள்வது யாவரும் விரும்பத்தக்க ஒரு புது முறையிலேயாகும். இறைவனை அடி பணிந்து இவர்கள் தங்கள் தங்கள் ஊருக்குப் பிரிந்து செல்லுவதும் மேன்மையுற்றதொரு தனி முறையேயாகும். இவர்கள் தங்கள் பிரிவை நினைக்கும்போது குரல் தழ

தழத்துவிடும். விடை பெற்றுக்கொண்டு பிரிவதற்கு ஒரு நாழிகையாவது ஆகும். பிரிந்து சிறிது தூரம் வரையில் சென்று, மறுபடியும் சற்று நின்று ஒருவரை யொருவர் பேரன்புடன் நோக்கிப் பின்னர் நடந்து செல்வார்கள். இவர்களது நட்பு, ஸ்ரீரங்கத்து மக்களுக்கு ஒரு பழமொழியாகவே ஆகிவிட்டது. நட்பைப் பற்றிப் பேசும்போதெல்லாம் மக்கள், "நட்பென்றால் ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் ஏற்பட்ட தொன்று; மற்றது நாம் கண் கூடாகக் காண்பது புண்டரீகருக்கும் அணையாருக்கும் உள்ளதுதான்" என்று சொல்லுவார்கள்.

இவர்கள் ஸ்ரீரங்கத்திற்கு வரும்போதெல்லாம் ஆச்சான் பிள்ளையுடைய திருமாளிகைக்குச் சென்று, அவரது சொற்பொழிவைக் கேட்பது வழக்கம். ஆச்சான் பிள்ளைக்கு இவர்களிடம் தனிப்பட்ட மதிப்பு உண்டு. இவர்கள் தமக்குள் பழகிக்கொள்ளுவதையும், காலக்ஷேப கோஷ்டியிலுள்ள பெரியோர்களுடன் பழகுவதையுங் கண்டு பெரிதும் உகப்பர் ஆச்சான்பிள்ளை.

ஒரு நாள் புண்டரீகர், அணையார்-இருவருக்கும் ஓர் அற்ப விஷயத்தைக் குறித்துச் சச்சரவு ஏற்பட்டு, மனத்தாங்கல் மூண்டது. இறைவனது குணங்களில் ஒன்றினைப் பற்றி ஆராய்ந்து வரும்போது இவர்கள் சற்று மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

"சான்று என்ன ?" என்றார் அணையார்.

"நீர் படித்தது இவ்வளவுதானா ?" என்றார் புண்டரீகர்.

"நீர் கோஷ்டியிலே வைஷ்ணவ லக்ஷணம் கேட்டது இவ்வளவுதான் போலும்!"

"உமக்குச் சாந்தம், தமம், பொறுமை—இவை எல்லாம் அதிகம் வாய்ந்துள்ளன! எனக்குப் படிப்பு போதாதென்று சொன்னதுபோதும்?"

"திருவெள்ளறையார்களே இப்படித்தான்!" என்றார் அன்பில் அணையார்.

"நீர்தாம் அன்பில் அணையார்; உமக்கு அன்பு எது?"

"ஓய்! குறைகள் நம்மனவாயிருக்க நீர் ஓர் திவ்ய தேசத்தைக் குறைகூறுகிறீரே! என் ஊர் அன்புக்கு இல் ஆகும்; தெரியுமா?"

"நல்லார்கள் வெள்ளறை என்ற ஆழ்வாரது சொல்லையும் நீர் பொய்யாக்கிவிட்டீரே!"

இவ்வாறு வாக்குவாதம் கைகலப்பு வரையில் வந்து, பின்பு இவர்களும் பிரிந்து வெவ்வேறிடத்துக்குச் சென்று விட்டனர். அன்று மாலையிலே நடந்த காலக்ஷேப கோஷ்டியிலே இவர்கள் இருவரும் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து உட்கார்ந்திருந்தனர். குழுமியிருந்த பெரியோர்கள் இவர்களையே வியந்து பார்த்த வண்ணம் இருந்தனர். ஆச்சான் பிள்ளை அன்றைச் சொற்பொழிவை விரைவில் முடித்துக்கொண்டு அன்பில் அணையாரை அழைத்தார். அன்பில் அணையாரும் கண்ணுங் கண்ணீருமாக ஆச்சான் பிள்ளை திருவடிகளில் தண்டனிட்டு நின்றார். ஆச்சான் பிள்ளையும், "இன்று நீர் உள்ளங் கலங்கியிருக்கக் காரணம்

என்ன? எப்போதும் புண்டரீ கரை விட்டுப் பிரியமாட்டீரே; நீங்கள் இருவரும் தனித்து உட்கார்ந்திர்கள். உங்களுக்குள் ஏதாவது மனத்தாபம்...'' என் பதற்குமுன் "அந்த கர்வி யைப் பற்றிப் பேசவேண்டாம். தான் மெத்தப் படித்தவன் என்று செருக்கு அவனுக்கு அளவில்லாமல் இருக்கிறது. அவனைப் பற்றி எண்ணுதபோ தெல்லாம் இனியதாகும்'' என் ருர் அணையார்; நிகழ்ந்தவை யாவற்றையும் ஒன்றும் விடா மல் பின்பு கூறினர்.

இது கேட்ட அப்பெரியார், "கெடுவீர்! குணம் படைத்துப் பெருமை பெற வந்தான் ஸர் வேச்வரன்; அவனுடைய குணத்தைப் பற்றி நீங்கள் சண் டையிட்டுக்கொண்டு அவன் திருவுள்ளம் புண்படும்படி செய் தீர்கள். ஒரு வைஷ்ணவன் ஒரு வைஷ்ணவனுடன் பழகும் போது அவனது குணத்தை யும் தோஷத்தையும் கவனித் துக் குணத்தை ஏற்றுக் கொண்டு, தோஷத்தை அறவே மறந்துவிட வேண் டும். மேலும் சொல்லுகிறேன், கேளும். தண்டல் படையின ஞய யமன் 'பரிஹர' என்ருன், பிராட்டி 'ந கச்சிந் நாபராத்யதி' என்ருள், ஈச்வரன் 'செய்தாரேல் நன்று செய்தார்' என்ருன், ஆழ்வார்கள் 'அவன் தமர் எவ் வினையராகிலும்' என்ருர். இங்கு புண்டரீகரது குற்றத்தைக் காண உம்மைத் தவிர யார் இருக்கிருர்?

"பாவஞ் செய்வோர்களை ஏற்றவாறு தண்டித்துக் 'கொடுமை செய்யும் கூற்றம்' எனப் பெயர் பெற்ற யமனும் திருமால் அடியார்களைக் கண்டு அணுக அஞ்சித் தனது தமர் களை விளித்து,

**திறம்பேல்மின் கண்டீர்,**
**திருவடிதன் நாமம்**
**மறந்தும் புறந்தொழா**
**மாந்தரை—இறைஞ்சியுஞ்**
**சாதுவராய்ப் போதுமின்கள்**
**என்ருன் நமனுந்தன்**
**தூதுவரைக் கூவிச்**
**செவிக்கு**

என்றவாறு, 'இறைவனது திருநாமங்களை மறந்திருந்தா லும் புறமே தொழாத மாந்தரி டம் சாதுவராய் நடந்து கொள் ளுங்கள்' என்ருன்.

"ஹநுமான் இராமபிரானது வெற்றியைப் பிராட்டியிடம் (சீதையிடம்) தெரிவித்து, 'தங் களைச் சொல்லாலும் சைகையா லும் நலிந்த அரக்கியர்களைக் கையால் தகைந்து பற்களால் கிழித்தெரிய விரும்புகிறேன்' என்ன, பிராட்டியும்,

**பாபாநாம் வா சுபாநாம் வா**
**வதார்ஹாணாம் ப்லவங்கம!**
**கார்யம் கருண மார்யேண**
**ந கச்சிந் நாபராத்யதி**

சோறிட்ட இராவணன் சொல் லியபடி நடந்த இவர்கள் நல்ல லவர்களாகிலுமாம், நீ சொல்லு வதுபோல் இவர்கள் குற்ற வாளிகளாகிலுமாம்; மேன்மை யுற்றவன் இவர்கள் விஷயமா கக் கிருபையே செய்யவேண் டும்; ஆராய்ந்தால் குற்றஞ் செய்யாதவர் ஒருவரு மிலர்' என்ருள்.

"உலகுக்கெல்லாம் தாயாகிய பிராட்டியின் சேர்க்கையாலே இறைவன் இணையற்ற கருணை கொள்வான். பிராட்டியும், 'நாம் காட்டிக் கொடுத்த பின்பும்

இவர்களிடம் இவனுடைய நினைவு எது?" என்று சோதிக்கைக்காக அடியவரைப் பற்றிக் குறை சொல்லக் கூடும். அப்போது இறைவன், 'என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்; நீ சொல்லுகிற குற்றம் அவர்கள் செய்ய மாட்டார்கள்; செய்தார்களாகில் பொல்லாதோ? உன் கார்யமான சேர்த்தியை நீ உண்டாக்குமதொழிய பிரிக்கை உனக்குப் பணியன்று' என்று அவளோடு மறுதலைத்துக் காத்தருள்வான்.

"ஆழ்வார்களும் அடியார்களது பெருமையைப் பற்றி,

**அவன்றமர் எவ்வினைய**
**ராகிலும் எங்கோன்**
**அவன்றமரே என்றொழிவ**
**தல்லால்—நமன்றமரால்**
**ஆராயப் பட்டறியார்**
**கண்டீர், அரவணைமேல்**
**பேராயர்க் காட்பட்டார் பேர்**

என்றெல்லாம் கூறியுள்ளார்கள். அடியார்களிடம் குற்றம் சொல்லுவதற்கு யாராவது வேண்டாமா?" என்றார்.

இது கேட்ட அணையார் ஆச்சான் பிள்ளையது அடிகளில் வேரற்ற மரம்போல் விழுந்து, நான் செய்தது தவறு, தவறு. இனி இவ்வாறு நடந்துகொள்ள மாட்டேன். இதுவரையில் நான் இவ்வாறு செய்ததில்லை. இன்று இந்த நல்லுரையைக் கேட்கவேதான் இந்தச் சச்சரவு ஏற்பட்டது போலும்!" என்றார். இவை ஒன்றையுங் கவனியாது ஒரு மூலையில் வருத்தத்துடன் நின்று கொண்டிருந்த புண்டரீகர், தாமே விரைந்தோடி வந்து, ஆச்சான்பிள்ளை பாதங்களிலும், அணையாரது பாதங்களிலும் வணங்கி, "அணையாரே! பொறுத்தருள வேண்டும். அடியார்களது பெருமையைப் பற்றிச் சற்று முன்தான் நினைத்துப் பார்த்தேன். 'தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேலாரே' என்றும், 'கடன் மல்லைத் தல சயனத்துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடையார் அவரெங்கள் குலதெய்வமே' என்றும் 'வண்சேறை எம்பெருமான் அடியார் தம்மைக் கண்டேனுக் கிதுகாணீர் என்னெஞ்சும்கண்ணிணையுங்களிக்குமாறே' என்றும் ஆழ்வார்கள் சொல்லியதுபோல் அடியார்கள் நமக்குச் சிரோபூஷணமாகவும், குலதெய்வமாகவும், அவர்களைக் காண்பதே கண்ணினுக்கு ஒப்பற்றதோர் விருந்தாகவும் நினைக்க வேண்டியிருப்ப, எல்லாவற்றையும் மறந்து அஹங்கார மமகாரங்களால் இத்தனை செய்தேன்; இனி இவ்வாறு செய்யாதிருக்குமாறு கடைக்கணித்து அருள் செய்ய வேணும்" என்று நெடுங்காலம் சோகித்துத் தரையிலே கிடந்தார்.

ஜனவரி

பையன்:- தாத்தா ஜனவரி கயிறுகேட்டயே. கொண்டுவந்து இருக்கேன் இந்தா!

தாத்தா:- என்ன! ஜனவரி கயிரு...இது என்ன...இது பேரு சனல்பிரி கயிறுடா...ஜனவரியும் இல்லே, பிப்ரவரியும் இல்லே:

# உத்தம புத்திரன்

—பாரு—

வீனஸ் பிக்சர்ஸார் இதுவரையில் இரண்டு படங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இரண்டும் ரஸிகர்களிடத்தில் நல்ல பெயர் எடுத்துவிட்டன.

"அமரதீபத்தில்" தங்களுடைய ஆக்கத்தையும் ஆற்றலையும் தெளிவுபடுத்தியவர்கள், "உத்தமபுத்திரன்" மூலம்—வீனஸ் பிக்சர்ஸ் என்றால் 'நல்ல படம்' தயாரிப்பவர்கள் என்ற 'எண்ண விளக்கை' மக்களுடைய உள்ளத்தில் ஏற்றி தரத்தையும் வசூலையும் உயர்த்திவிட்டார்கள்!

கதை பழைய கதைதான்! நடிப்பிலும், பிடிப்பிலும், அமைப்பிலும் சிறந்தது!

நடிகர் திலகத்தை 'வில்லன்' பாகத்தில் சிறக்கச் செய்த பிரகாஷ் ராவும், பாத்திரம் அமைத்த ஸ்ரீதரும் கதாநாயகன் குண விசேஷங்களை விளக்கத் தவறிவிட்டார்கள். அது ஒரு பெரிய குறைதான். மொத்தத்தில் எந்த வேஷமும் தன் நடிப்பால் சிறக்கும் என்பதை வெள்ளிடை மலைபோல் விளக்கிவிட்டார் கணேசன்.

நாட்டிய பேரொளி படத்தில் நடமாடுகிறார். வாய்ப்புக்கள் குறைவு. பத்மினியின் 'மேக்கப்பில்' கவனம் செலுத்தியவர்கள் (வீனஸ் பிக்சர்ஸார்) அவருக்குக் கொடுத்த பாகத்தை சற்று விரிவாக்கி படத்தின் அழகை இன்னும் சற்று 'மேக்அப்' செய்திருக்கலாம்.

தங்கவேலுவின் நகைச்சுவையில் சுவை இல்லை!

ராகினி சுமார்!

கண்ணாம்பாவின் வழக்கமான புலம்பலை குறைத்து 'நடிக்க' வைத்திருக்கிறார்கள்.

அரசிளங் குமாரர்களின் மாமா நாகநாதன் (நம்பியார்) பரவாயில்லை!

சோமுவின் 'ஸ்டண்டு' வேலைகள் நன்றாக இருக்கின்றன.

காட்சி ஜோடனைகளில் கங்காவின் திறமை வெளிப்படுகிறது.

வின்சென்டின் ஒளிப்பதிவு மிக உயர்ந்தது!

அதிகமான பட ஒப்பந்தங்களினாலோ என்னமோ ஜி. ராமநாதனின் திறமை வெளிப்படவில்லை. என்றாலும் கு. மா. பா. வின் 'ராக் அண்டு ரோல்' இசை பாமர மக்களுக்குப் பிடிக்கும். சௌந்தராராஜனும், சுசீலாவும் பாடிய "முல்லை மலர் மேலே" என்ற பாடலும், சுசீலா பாடிய "உன்னழகை கன்னியர்கள்" என்ற பாடலும் செவிக்கு இனிமை பயக்கும்.

படத்தில் குறைகள் பல உண்டு! என்றாலும் 'உத்தம புத்திரன்' ஒரு சிறந்த படம்!

* * *

# கருங்கடலில் களிப்பு அலை

— வை. மு. விஜயலக்ஷ்மி —

எங்கும் இருள். 'ஹூய்... ஹூய்' என்ற பேய்க்காற்றைத் தவிர வேறு சப்தமே வெளியுலகில் இல்லை. அரக்கோணம்புகை பாஸஞ்சர் இருளைக் கிழித்து புகையைக் கக்கிய வண்ணம் தனக்கே உரியபேரிரைச்சலோடு காற்றுக் கேற்ற தாளக் கட்டுடன் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

அது சுமந்து செல்லும் ப்ரயாணிகளிலே ஒருவனான தினகரனின் மனமும், ரயிலுக்கு ஒப்பாகவே சஞ்சரித்துக்கொண்டிருந்தது என்றால் மிகையாகாது. வெளி உலகைப் போலவே அவன் உள்ளமும் அந்தகாரச் சுழலில் அகப்பட்டுத் தவித்து பாகாய் உருகிக்கொண்டிருந்தது. 'அச்சுழலிலிருந்து தப்ப வழியுண்டா? விடிவு ஏற்படுமா' என்று அவன் மனம் ஏங்கி ஏங்கி 'புஸ்' என்று உஷ்ணமான பெருமூச்சை வீசியது. பல எண்ணங்கள் அலை அலைகளாகச் சீறிப் பொங்கி குமிழிகளோடு, அவன் நெஞ்சப் பாறையில் மோதி உடைந்துகொண்டிருந்தன.

ரயிலில் உள்ள ஆசனங்களின் இடுக்குகளையே தனது சொந்த மாளிகையாகக் கொண்டு,பரம்பரையாகவ்ருத்தியாகிக் கொண்டிருக்கும் மூட்டைப் பூச்சிகள் தினகரனின் இனிப்பானரத்தத்தை சுவைத்துக் கொண்டிருந்தன. அதன் தாக்குதலினால் அவன் உடல் இப்படி அப்படியும் ஆடிஅலுத்தவாறு இருந்ததே தவிர, அவன் உள்ளத்தை கடித்து ஆறாதபுண்ணாகத் துளைசெய்து கொண்டிருக்கும் எண்ணப் பூச்சிகளின் பாதையை நினைத்தால்; இது ஒன்றுமேயில்லை என அவன் எண்ணினான்.

'இதே நேரத்தில், இதே வண்டியில், நானே... ஆனால் ஐந்துவருடங்களுக்கு முன்னால் ப்ரயாணம் செய்தேனே, அப்போது இருந்த எதிர்பார்ப்பு, சந்தோஷம், இன்பக்கனவு, பெருமை, கர்வம்...எல்லாம் இப்போது எங்கோ ஓடிஒளிந்து விட்டன? அவையெல்லாம்கூட என்னைப் பிடிக்காது உதறித் தள்ளி விட்டனவே. சுமதி! ஒருத்தி உதறித் தள்ளியது போதாதா எனக்கு. நான் அப்படி என்ன பாவம் செய்து விட்டேன்?

ஐந்து வருடங்களுக்கு முன்னால் எந்தக் காரியத்திற்குச் சென்றேனோ, அதற்குதானே இப்போதும் போகிறேன். ஆனால் இப்போது வெளிவருவது குதூகலம் அல்ல; குமுறல். எதிர்பார்ப்புஅல்ல; நெஞ்சக் குமுறலின் எதிரொலி. இன்பக் கனவா? துன்ப நினைவின் பெருமூச்சுதான். ஏன் இப்படிப் பட்டமாறுபாடு? அப்போதுபோன போது உலகம் ஆசீர்வதித்துப்புகழ்ந்தது. அதிர்ஷ்டசாலி எனக் கூறி சந்தோஷப்பட்டது. ஆனால் இப்போது இழிவாய்ப்

பேசி கேலியல்லவா செய்யும்? எத்தனை உள்ளங்கள் இதனால் வருந்தி வாடும்? என்ன பாதகம்.

தூ...தூ...! மானங்கெட்ட வாழ்க்கை. உலகமாம் உலகம் பாழும் உலகில் என்ன நியாயம். எல்லாம் ஒரே அநியாயம் தான். சுமதி! உனக்கு எப்படி மனம் துணிந்தது என்னை தனியனாக்கிவிட்டுபறந்தோட நீ இருந்திருந்தால்... இப்படி ஒரு நிலை ஏற்படுமா? அல்லது நான் தான் இப்படிப் போக நேரிட்டிருக்குமா?

என் இல்வாழ்க்கையின் ஜீவநாடியாய் விளங்கி, எங்களைச் சந்தோஷச்சாகரத்தில், இன்பப் படகாய் இருந்து கடத்திக் கொண்டிருந்த என்னருமைச் சுமதி சென்று ஒரு மாதம். ஒரு மாதமேதான் ஆகிறது. அதற்குள் மறு கல்யாணமாம்.

இந்த ஒரு மாதம் முன்புவரை 'தினகரனைப்போல் இருப்பதற்குக் கோடிப் புண்ணியம் செய்திருந்தாலும் நமக்குக் கிடைக்காது. கைநிறையச் சம்பளம் அழகான வீடு, தங்கச் சிலை தோற்ற அழகுபிம்பம் மனைவி, கொஞ்சிக் குலவ இரு கண்மணிகள், அவனுக்கென்னப்பா குறை?' என்று சிலர், வாழ்த்தியும், பெருமைக் கண்களுடனும் கூறி ஊர் முழுவதும் தண்டோரா போட்டு பறை சாற்றினர். ஆனால் அவர்களே இப்போது 'பாவம் தினகரன். சின்னஞ் சிறிய குழந்தைகளோடு, மனைவி போன துக்கத்தில் எப்படி தவிக்கிறான். சீக்கிரம் காதோடு காதுவைத்தாற் போல் ஒரு பெண்ணைப்பார்த்து கட்டிக் கொடுத்து விடுங்கள். அப்போதுதான் நல்லது' என்று உறவினர்களுக்கு உபதேசித்து பிதற்றுகிறார்கள்.

என்ன சமுதாயம்! என் சுமதி போன ஒரு மாதத்தில் அந்த எண்ணத்தை காற்றில் பறக்க விட்டு, சின்னஞ்சிறிய பிஞ்சுகளை வதக்கி சாக விட்டு, நான் கல்யாணம் செய்துகொள்வதாம். வருபவள் என் ரத்தினங்களை படுத்தும் பாட்டை என் கண்ணாலேயே கண்பதா? அப்பப்பா! வேண்டவே வேண்டாம். பிரிந்துபோன சுமதியும் தன் குழந்தைகள் கண் கலங்குவதைப் பார்த்து வயறெறிந்து கண்ணீர் விடுவதா? அவள் சாபம் எங்கு போகும். இருப்பது போதாது. அது வேறு மூட்டைமூட்டையாகச் சேர்ந்து வட்டமிடுமே. குழந்தைகள் தடுமாற சுமதி தவிக்க, எனக்குமட்டும் என்ன சுகம் வேண்டிக் கிடக்கிறது.

ஒரு பெண் இல்லாமல், அதுவும் மனைவி என்கிற ஸ்தானத்தில் இல்லாமல் ஒருவனால் வாழமுடியாதா? ஏன் முடியாது. நான் செய்துதான் பார்க்கிறேன். என் குழந்தைகளைக் காப்பது என் கடமையல்லவா? அதற்கு ஒரு முடிவு செய்தே தீரவேண்டும். சுமதி! என்னை ஏன் இப்படிச் சித்திரவதை செய்கிறாய்? ஒன்றும் புலனாகவில்லையே. ஒரு வழி காட்ட மாட்டாயா?' இப்படிப் பல எண்ணங்கள், ஊசலாடி உலர்ந்த சருகுபோல் உதிர்ந்த வண்ணமிருந்தன. அதற்கு ஒரு அணை கட்ட முடியுமா? சூரிய கிரணங்களின் சுளீரென்ற உணர்ச்சியால் தினகரனின் எண்ணத் தொடர் அறந்ததேயன்றி, இல்லாவிடில் நீண்டு தானிருக்கும்.

மனத்தின் உளைச்சலினால் எத்தனை அடக்கியும் கண்கள் தானாகவே பெருக்கிவிட்ட கண்ணீரை, சகப்ரயாணிகள் யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்ற ஒரு கிலியுடன் மெள்ளக் கண்ணோட்டம் விட்டவன், யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. என்று அதுவரைக்கும் த்ருப்தி அடைந்தவனாய் திரும்பினான்.

வண்டி நிற்பதால் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்ததில் தான் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்து விட்டதை யறிந்து ஒரே எட்டில் தாவி இறங்கினான்.

இறங்கியவன், அடுத்தப்பெட்டியில் தன்னைப் போலவே பெண் பார்க்க வந்திருப்பவன் ஒருவனை பெண் வீட்டார் தடபுடலாக உபசரித்துக் காரில் அழைத்துப் போவதைக் கண்டான். தன்னைமறந்திருந்தவன், சிறிது நேரத்தில் சுய உணர்வு பெற்றவனாய்சுற்றிநோக்கினான். யாரும் தன் வரவிற்காக வராதிருந்ததைக் கண்ணுற்றதுமே அவன் உள்ளத்தில் சுருக்கென்று ஒரு முள் தைத்தது. சற்றும் முற்றும் பார்த்து விழித்தவாறாக இருந்தான்.

அப்போது சோடாக் கடையில் அமர்ந்திருந்த ஒருவன், "ஓ! பெண் பார்க்க வந்தவரா நீங்கள். அந்த விஷயத்தை மறந்தே போய்விட்டேன். வீடு அருகிலே தான் இருக்கிறது. நடந்தே போய் விடலாம். தண்டத்திற்கு வண்டி எதற்கு ?" என்று உபசாரணையை நடத்தினான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் தினகரனுக்கு நெருப்புக் குண்டத்தில் தூக்கிப் போட்டதுபோல் இருந்தது. அவன் பதிலே பேசவில்லை. 'என்ன! மறந்து போய்விட்டானா? ஹ்ம் எவ்வளவு அலட்சியம் இரண்டாம் கல்யாணம் என்றால், முதல் கல்யாணத்திற்கு விழுந்துவிழுந்து உபசரிப்பு, இதற்கு? அடக் கடவுளே! இப்படியா இருக்கிறது உலகம். இத்தனை நாளாக ஏற்படாத அனுபவம் எல்லாம் ஏற்படுகிறதே!

நான் எதில் குறைந்து விட்டேன்? பணத்திலா? குணத்திலா? இல்லையே வயதும் என்ன ஆயிற்று? இவ்வளவு அலட்சியம் செய்ய...கடிதம் மேல் கடிதம் எழுதி, கெஞ்சி, கூத்தாடி, என் மனத்தையும் குழப்பி, அத்தைக்குத் தூபம் போட்டு, இவ்வளவு தூரம் செய்து என்னை வரவழைத்துவிட்டு, மறந்துவிட்டேன்என்று கூறுவதோடில்லாமல், 'தண்டத்திற்கு வண்டி எதற்கு' என்கிறானே, பாவி. அவ்வளவு கேவலமாகப் பேசும் வீட்டிற்கு எதற்காகப் போக வேண்டும்? இன்னும் வீட்டிற்குள்ளும் போய்விட்டால் எப்படியிருக்குமோ? சே...சே...அதோ பார். அவன் 'வா' என்று கூட அழைக்காது வீட்டிற்குள் நுழைந்து விட்டான். நாம் எதற்குப் போக வேண்டும்?' என்று வாயிலிலேயே சுவர் ஓரமாக நின்றிருக்கையில், உள்ளே எழுந்த சில பேச்சுக் குரல்கள் இவன் கவனத்தைச் சங்கிலியாய் இறுக்கி இழுத்தன.

"இதோபார்! அந்த இரண்டாம் கல்யாணக்காரன் வந்திருக்கிறான். பெண்ணை அலங்காரம் செய்துகொள்ளச் சொல்.

"என்ன அலங்காரம் வேண்டிருயிருக்கு தடபுடலாய். இரண்டாம் தரக்காரனுக்கு, டீ ஏதோ ஒண்ணைக் கட்டிக் கொண்டு வா" எங்கே இருக்கான் அவன்?"

"எல்லாம் பின்னாலே வந்தான். வரட்டும்"—ஒவ்வொரு வார்த்தையும் அவன் இதயத்தைத் துகள் துகளாக்கி, புதைந்து கிடந்த பெருமூச்சையும், தேங்கிக் கிடந்த கண்ணீரையும் வெளிவரச் செய்தன. நீர் துளிகள் தரையில் 'பட்பட்' டென்று விழுந்து அங்கிமிடமே ஆவியாய்க் காற்றில் கலந்தன. பேசமுடியாது நா உலர்ந்தது. ஏற்கனவே உள்ள அலைச்சலில் இவர்களது கோரமான செய்கையும் இழிவான பேச்சும், சேர்ந்து, அவனை பித்தனாக்கியது. புயலில் அகப்பட்ட கொடி போல் நிற்கமாட்டாது தள்ளாடி தத்தளித்தான். கால்கள் பின்னலிட்டு கெஞ்சின. இவையெல்லாம் ஒரு விநாடியில் எழுந்த உணர்ச்சிகள். ஆனால் மறு விநாடி! அவனாலேயே நம்ப முடியவில்லை.

அச் சூழ்நிலையில் ஏற்பட்ட ஒரு வைராக்கியமும், ஆவேசமும், அவனது தளர்ந்து ஓய்ந்திருந்த பாதங்களுக்கு புத்துயிர் அளித்து, புது மனிதனாக்கி வெகு வேகமாக நடக்கச் செய்தன. நடந்தவன் நேராக புகை வண்டியில்தான் ஏறினான். பிறகுதான் அவன் மூச்சு தங்கு தடையின்றி வெளிவர யத்தனித்தது. நிம்மதியான மூச்சுதான்!

"தினகரா! வேணுமடா, உனக்கு வேண்டும். உறவினர் பேச்சையும் அத்தையின் தொந்திரவையும் பொருட்படுத்தி இப்படிப்பட்டவர்களுக்கு இசைந்து கடிதம் எழுதியதோடல்லாமல், நேரிலும் புறப்பட்டு வந்தாயே. வரவேற்பைப் பார்த்தாயா? உன் கண்மணிகள் தாயாரைப் பிரிந்து—வாய் திறந்து தன் கஷ்டத்தைச் சொல்லக்கூட தெரியாத பச்சிளங் குழந்தைகள்—அங்கு திண்டாட, நீ உன் சுகத்தை தானே முதன்மையாக வைத்து வந்தாய். நல்ல புத்திமதி கிடைத்ததா? நீ மணந்து, உன் குழந்தைகள் மனநிம்மதியற்று தவித்தால் சுமதி மனது என்ன பாடுபடும்? வேகமாகப் போ. உன் செல்வங்களை எடுத்து ஆறுதல் கூறு, வேலைக்காரன் அமர்த்திக் கொண்டு, உன் காரியங்களை கஷ்டமின்றி, குழந்தைகளுக்குக் குறையின்றி செய்' என்று அவன் மனசாட்சியே கட்டளையிட்டது. ஒவ்வொரு சொல்லும், அவனை சம்மட்டியால் அடிப்பதுபோல் ஒரு ப்ரமை ஏற்பட்டு கற்சிலையாய் சமைந்திருந்தான்.

எப்படி இறங்கினானோ? வீடு சென்றானோ? என்பது அவனுக்கே புலப்படாதது ஒரு வேடிக்கைதான்.

சென்றவன், கையிலிருந்த பையை ஒரு மூலையில் விட்டெறிந்தான். அவன் நயனங்கள் அப்படியும், இப்படியும் எதையோ அவசரமாக தேடுவதுபோல் சுழன்றன. அதற்குள் அங்கு வந்த அவன் அத்தை "என்னப்பா? எல்லாவற்றையும் முடித்து வந்துவிட்டாயா? என்ன சேதி" என்று ஆவல் ததும்ப கேட்டாள்.

தினகரன் விரக்தி நிறைந்த சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு "ஓ! முடித்து வந்து விட்டேன் அத்தை. தீர்மானம் ஆகிவிட்டது."

"என்ன! நிஜமாகவா, எப்போது முகூர்த்தம்? அப்பாடா. இப்போது தான் எனக்கு திருப்தி."

"முகூர்த்தமா?.....எப்போதும் திருப்திதான். என்ன தீர்மானம் தெரியுமா. இதோ பார் என் ரத்தினங்கள் இவர்கள் பொருட்டு, ஏன் என் பொருட்டே மறு கல்யாணம் என்னும் பேச்சை மறு ஜென்மத்திலும் எடுக்கக்கூடாது என்று சபதம் செய்து தீர்மானித்துவிட்டேன். நீ சொன்னபடி அங்கு சென்றதற்கு, சரியான சாட்டையடி கொடுத்து என் கீழ்த்தரமான, சுயநலமான புத்தியை திருத்திவிட்டார்கள்" என்று தீவிரமான உறுதி தொனிக்க, சாந்தத்துடன் கூறினான்.

நடந்த விஷயம் என்ன என்பதை விசாரிப்பதற்குள், தினகரன், தன் இரு பொக்கிஷங்களையும் தூக்கியவாறு அறைக்குள் அடைக்கலமானான்.

கட்டிலில் அமர்ந்தவன் கண்களை மூடியவாறு "ஆண்டவனே! தக்க சமயத்தில் படுகுழியில் விழ இருந்த என்னை காத்தருளிய நீயே, என் இரு குலவிளக்குகளையும், அணையாது காத்து, கலங்கரை விளக்குப்போல் தீப ஜோதியாய், உயர்த்தி விளங்கி, என் சுமதி போன குறையைத் தீர்த்து எனக்கு சாந்தியை அளிக்க வேண்டும்" என்று மனம் விட்டே, உறக்கவே வேண்டினான்.

அதற்கு ததாஸ்து கூறுவதுபோல் கோவில் மணியும் ஒலித்தது. குழந்தைகளும் மணியோசைக் கேட்டு குதித்து கூத்தாடினர். இதைக் கண்ட தினகரனுக்கு புன்னகைத்தவழ ஆனந்த பாஷ்பம் பொழிய, அவ்விரு குழந்தைகளையும் அணைத்து முத்தமிடுவதைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

* * *


## கை எடுத்து கும்பிட்டா போதுமா?

"அப்பாடா......ரயிலே அதுமட்டும் கிளம்பினாயா? கோடி நமஸ்காரம்"

"அட! ரயில் போனா உனக்கு என்னப்பா அவ்வளவு சந்தோஷம்".

"அட! உனக்கு என்னப்பாதெரியும். உறவு இல்லாத முறையெல்லாம் சொல்லிக்கிட்டு இருபது நாளா எங்க ஊட்டே 'டிகாணு' போட்டு 200-ரூபாய் செலவு வெச்சாங்களே... அப்படிப் பட்ட மகராஜாக்களை: இம்மிட்டு அழைச்சிகினு போவுதே...இதை கை எடுத்தா...கும்பிடணும் ...விழுந்தல்லவா கும்பிடணும்..."

"நீ! ஒண்ணு...விழுந்து கிழுந்து வைக்காதேப்பா... மூட்டை இழுக்கர வண்டி ஏத்திடபோரா வா...வா..."



★

# சொல்லட்டுமா !

ஹாஸ்ய நடிகர் L. நாராயண ராவ்

"இளங்கன்று பயமறியாது" என்று பழமொழி யொன்று சொல்வார்கள் பாருங்கள்! அதை இப்போதுதான் மெல்ல நினைத்துப் பார்க்கிறேன். அந்த காலத்தில் அத்தகைய பயத்தை அறிந்திருந்தால் பாலாமணியம்மாளைப் பார்த்துவிட்டு, ஸரஸ்வதிபாயின் கதையைக் கேட்டுக்கொண்டு மணி போவதே தெரியாமல் உட்கார்ந்திருப்பேனா?

பக்கத்திலிருப்பவர்கள் மணியைத் தெரிவித்த பிறகு இளங்கன்றின் உள்ளத்திலும் பயம் புகுந்துகொண்டு பிடரியைப் பிடித்து ஆட்டிய வேகத்தில் வீதியில் வந்து நின்றேன். இக்காலத்தைப் போல் அக்காலத்தில் அடிக்கொரு மெர்க்குறி விளக்கும், வீடுதோறும் மின்ஸார விளக்குகளும் உண்டா! தெருக்களில் முனிஸிபாலிடி லாந்தர்களில் மினுமினும் பூச்சி பறப்பதுபோல் கண்ணைச் சிமிட்டிக்கொண்டிருக்கும். பெரும்பாலும் இருள்தான் சூழ்ந்து பயங்கரத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

எப்படியோ ஒரு அஸுர தைரியத்துடன் நான் போக வேண்டிய வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சேர்ந்தேன். அப்பா, "ஏண்டா இத்தனை நேரம்" என்று மிரட்டப் போகிறாரோ என்கிற பயத்துடன் மெல்ல உள்புறம் எட்டிப் பார்த்தேன். என் பிதாவும் அந்த பங்களாவின் சொந்தக்காரரும் ஏதோ முக்கியமான புராண ப்ரவசனம் செய்துகொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவர்களைத் தாண்டிக்கொண்டுதான் உள்ளே போக வேண்டுமாகையால் பயம் சற்று தலை எடுத்து வாட்டியது.

சடக்கென்று ஒரு யோசனை செய்தேன். அதாவது பங்களாவில் விசாலமான திண்ணைகள் வாசலில் இருந்தன. அதில் ஒன்றின்மேல் மேல் துண்டைப் போர்த்திக்கொண்டு தூங்குவது போல் அடக்கமாகப் படுத்துவிட்டேன். உண்மையில் தூங்கினால் சரீரம் ஆடாமல் அசையாமலிருக்கும். வயிற்றிலோ பசி யொருபுறம் கிள்ளுகிறது. யாராவது வந்து பார்த்துவிட்டு, "ஐயோ பாவம். குழந்தை தூங்கிவிட்டது" என்ற அங்கலாய்ப்புடன் வந்து எழுப்பமாட்டார்களா? என்கிற எதிர்பார்ப்பில் சற்றுக்கொரு

தரம் தலையை நீட்டி நீட்டிப் பார்க்கும்போது உடம்பு அசையாமல் எப்படி கிடக்கும். நான் படுத்திருந்தது சில நிமிஷங்கள்தான் இருக்கும். என்றாலும் எனக்கு அந்த நேரம் ஒரு யுகமாகவேத் தோன்றியது.

அந்தப் பெரிய மனிதர் வீட்டில் வேலைக்காரர்களுக்குக் குறைவே இல்லை. புத்தி லிருந்து ஈசல் கிளம்புவது போல் வசவசவென்று இருந்தார்கள். மின்ஸாரமில்லாத காலமாகையால் பங்கா இழுப்பதற்கே இரண்டு மூன்று ஆட்கள் உண்டு. அக் காலத்தில் மோட்டார் கிடையாது. கோச் வண்டி என்றால் எப்படிப்பட்ட மதிப்பு தெரியுமா! இக் காலத்தில் ஏரோப்ளேனுக்குக் கூட அத்தனை மதிப்பில்லை என்று நான் திட்டமாகச் சொல்லுவேன். அத்தகைய கோச் வண்டியும் அதற்கான இரண்டு மூன்று ஆட்களும் உண்டு. இதுபோல் எத்தனையோ பேர்கள்.

என்னுடைய படபடப்பில் அந்த சிறிய நேரத்தை யுகம் போவதுபோல் கழிக்கையில் அவ் வீட்டு சமையல்காரன் "தேவு எங்கே, இன்னும் சாப்பிட வரவில்லையே" என்று உறத்துக் கூறும் குரல் எனக்குக் கேட்டதுதான் தாமதம். என்னையறியாத ஒரு உணர்ச்சியுடன் பின்னும் இழுத்துப் போர்த்துக்கொண்டு "எப்போ வருவாரோ! எந்தன் பசிதீர" என்ற பாட்டை இப்போது நினைக்கிறேன். ஆனால் அப்போது என்ன நினைத்தேன் தெரியுமா? "ஐயோ பாவமே. தேவு, சாப்பிடாமலா தூங்கிவிட்டாய். என்னப்பா! எழுந்து சாப்பிட வாடா கண்ணு. எழுந்திரு" என்று தட்டிக் கொடுத்துக் கூப்பிடுவார்களா? என்று எதிர்பார்த்துக்கொண்டு படுத்திருந்தேன்.

அடுத்த நிமிஷமே மேல் துண்டை உதறித் தோள்மீது போட்டபடியே சமையல்காரர் "உஸ், அப்பாடா" என்று காற்று வாங்கியபடி நான் படுத்திருந்த திண்ணையின் பக்கம் வந்தார். முக்காடிட்டுக் கொண்டு படுத்திருக்கும் என்னைப் பார்த்ததும், "யாரடா அது..." என்று கூறியபடி முக்காட்டை விலக்கிப் பார்த்தார். நான்தான் அந்த சயனுதிவாஸத்திலிருக்கிறேன் என்று தெரிந்ததும் சற்று கனத்த குரலில், "டேய் தேவு...சோம்பேரிப் பயலே... சாப்பிடாமல் தூக்கமென்னடா வந்துவிட்டது. எழுந்து சாப்பிட வாடா. ஊரைச்சுற்றி ஊளையிட்ட அலுப்பு, தூக்கம் வந்துவிட்டதோ! வீட்டு எஜமானியம்மா பையனைக் காணவில்லையே என்று கவலைப்படுகிறார். எழுந்திருடா!" என்று தட்டுகிற தோரணையில் நன்றாகச் சுளீர் என்று இரண்டு அறையை முதுகில் பதித்துவிட்டார்.

தூக்கத்தில் அலறி எழுந்திருப்பது போன்ற நடிப்புடன் எழுந்து சற்று அப்படியும் இப்படியும் பார்த்து விழித்து, கொட்டுவாய் விட்டு, சோம்பல் முறித்து தத்துபித்து என்று பேசி, ஏதேதோ செய்துவைத்தேன். சமையல்காரர் தரதரவென்று என் கையைப் பிடித்து அழைத்துச் சென்று "அம்மா தேவு எங்கேயோ

என்று கவலைப்பட்டீர்களே! தெருத் திண்ணையில் தூங்கி விட்டான். என்னவிருந்தாலும் நாட்டுப்புறத்திலிருந்த பையனோ இல்லையோ பட்டிணத்தைச் சுற்றிவரும் அலுப்பில் இருட்டும்போதே தூங்கி விட்டான்" என்று விமர்சனம் செய்தபடியே முதல்தரமான சாப்பாட்டைப் பரிமாறினார். அதோடு அன்றைய கண்டம் முடிந்தது.

அந்த வீட்டு குமாஸ்தாக்களில் எனக்கு மிகவும் பிடித்தவர் ஒருவர் உண்டு. அவருடன் திருவல்லிக்கேணி கடற்கரைக்கு வருவேன். அக்காலத்தில் 'பெலூனில் பறக்கும் மனிதன்' என்று ஒன்று பெரிதாகப் பறக்கும். அதைப் பார்த்து மகிழ்வதில் எனக்கு அபார ப்ரியம்.

தவிர இன்னொன்று. அது என்ன தெரியுமா! சிரிக்காமலிருந்தால் சொல்லுகிறேன். கோச் வண்டிக்குள் உட்கார்ந்து செல்வதைவிட அதன் பின்னால் குதிரைக்குப் புல் வைப்பதற்காக ஒரு பலகை ஆஸனம் இருக்கும். அதில் சில பிள்ளைகள் உட்கார்ந்து கொண்டு குஷியாக வீதியைப் பார்த்தவாறு போவார்கள். அம்மாதிரி எனக்கும் உட்காரவேண்டும் என்கிற ஆசை அலைமோதும். ஆனால் ஏதோ ஒரு மாதிரி வெட்கமும் கூடவே பாதிக்கும். இருப்பினும் எப்படியாவது ஒரு நாள் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்துவிடவேண்டும் என்று நினைத்தேன்.

ஒரு நாள் பீச்சு ரோட்டில் கோச் வண்டியில் பின்னால் ஒரு பையன் உட்கார்ந்து ஜம்மென்று சென்றான். வீதியிலே போகிற ஒருவன் கோச்மேனைப் பார்த்து, "பின்னாலே சௌக் போடு" என்று கத்தினான். இதன் பொருள் எனக்கு விளங்குவதற்குள் கோச்மேனின் ஜாட்டி பின் பக்கம் உட்கார்ந்திருந்த பையனை நன்றாக ஒரு கை சுளீர் என்று பார்த்துவிட்டது. அடுத்த க்ஷணம் பையன் தடார் என்று குதித்து ஓடினான்.

அதோடு என்னுடைய ஆசையும் குதித்து ஓடிவிட்டது. திருவல்லிக்கேணி நல்லதம்பித் தெருவில் ஒரு பெரிய மனிதர் என் பிதாவுக்கு வேண்டியவர் இருந்தார். அவர் வீட்டிற்கு நான் அடிக்கடி போவது உண்டு. அக்காலத்தில் க்ராமபோன் பாடுகிறது என்றால் அந்த உயர்வைச் சொல்லியே முடியாது. பெரிய புனல் ஒன்று சொருகி இருக்கும். ப்ளேட்டுதான் பாடுகிறது என்பது தெரியாது. ஆகையால் அந்தப் பெட்டிக்குள் மனிதர்கள் புகுந்துகொண்டு பாடுவதாகவே நினைத்துக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் ஏமாறுவார்கள்.

அந்த வீட்டில் க்ராமபோன் பாடும். இக்காலத்தைப்போல் சினிமா, ட்ராமா முதலிய பாட்டுக்கள் மருந்துக்கும் கிடையாது. அக் காலத்திலிருந்த பெரிய பெரிய வித்வான்கள், வித்வாம்ஸினிகள் தான் உயர்ந்த கீர்த்தனைகள், ராகம் பல்லவி, ஸ்வரம் முதலியன பாடியிருப்பார்கள். தவிர விகடம் செய்யும் சில வித்வான்களின் விகடத்தையும் ப்ளேட்டு எடுத்திருந்தார்கள்.

இந்த க்ராமபோன் கேட்கும் ஆசையால் என் பிதாவிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு அந்த வீட்டிலும் சில நாட்கள் தங்கினேன். க்ராமபோன் பாட்டுகளை அப்படியே பாடம் செய்து ஒப்பித்தும் காட்டுவேன். கூடவே பாடுவேன்.

அந்த வீட்டில் ஒரு தாத்தா இருந்தார். "தேவு, இந்தப் பெட்டியில் புகுந்துகொண்டு நீயும் பாடுகிருயா" என்று கேட்பார். ஆனல் அதுமட்டும் எதனுலோ பயந்துகொண்டு மறுத்துவிடுவேன். இப்படியாக இரண்டு மூன்று மாத காலம் சென்னையில் தங்கினேன். ரகஸியமாகவும் பகிரங்கமாகவும் பாலாமணி நாடகம், பார்ஸி கம்பெனி நாடகம் இன்னும் சில நாடகங்களையும் பார்த்தேன். ஸர்க்கஸ் கம்பெனியும் பார்த்தேன்.

என்னுடைய மனத்தில் "நானும இம்மாதிரி நடித்தும் பாடியும், நல்ல புகழ் பெற வேண்டும்" என்று ஆசை தினே தினே வ்ருத்தியாகித் துளிர் விட்டு முளைக்கத் தொடங்கியது. பிறகு பிதாவுடன் ஊருக்கு வந்தேன். ஊரில் ஏற்கெனவே எனக்கு ப்ரத்யேக ஆப்த சினேகிதர்கள் சிலருண்டு. அவர்களில் ஒருவன் வெகு வெகு அந்தரங்க சினேகிதன்.

அவனும் நானும் எங்கள் ஊரிலுள்ள கோயிலுக்குப் பின்னல் உள்ள தோப்பில் விளையாடுவோம். பேசுவோம், பொழுது போக்குவோம். அப்போதெல்லாம், "இந்த ஊரே எனக்குப் பிடிக்கவில்லை தேவு. நாம் எங்காவது ஓடிப்போய் விடலாமா?" என்று அவன் கேட்பான். அப்போது எல்லாம் ஓடிப்போவதால் உண்டாகும் பாதகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதல்லவா! ஏதோ ரயில் வண்டியில் ஜிகுஜிகு என்று போகலாம். இரண்டு சாரியும் வேடிக்கைப் பார்க்கலாம். வெளியூரில் உல்லாஸமாய் வீட்டு பயமின்றி இருக்கலாம். இஷ்டமான இடங்களுக்குப் போகலாம்... என்ற ஆதி அந்தமற்ற ஒரு ஆசைதான் மனத்தில் எழுந்துத் தூண்டியது.

அந்த ஆசையின் விளக்கைத் தூண்டும் தூண்டுகோல் போன்ற ஒரு சம்பவமும் நிகழ்ந்தது.

அதாவது என் அத்தையின் மகன் எங்கள் ஊருக்கு வந்தார். அவர் என்னிடம் தனியான ப்ரீதி உள்ளவர். ஆகையால் அக் காலத்தில் மிகவும் ப்ரஸித்தியாக விளங்கிய எலக்ட்ரிக் கல் வைத்த பொத்தான்களில் நான்கு வாங்கிக் கொண்டு வந்து என் சட்டையில் மாட்டிவிட்டார்.

"அடாடாடா! அந்தப் பேரானந்த சந்தோஷத்தை அளவிட்டுச் சொல்ல இப்போது கூடத் தெரியவில்லை. வசிஷ்டர் கையால் மகுடம் சூடப் பெற்ற ராமனுக்கு ஒப்பாகவே நான் ஆகிவிட்டேன். தளதள பளபளவென்று ஜ்வலிக்கும் பித்தானைப் போட்டுக்கொண்டு ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லோருக்கும் காட்டி வைரப் பித்தான் அணித்திருப்பது போல் பூரித்தேன். என்னுடைய சிநேகிதர்களுக்கு இதைப் பார்த்ததும் சிறிது பொருமை கூட உண்டாகியது.

என்னுடைய அருமைத் தங்கையைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருப்பது உங்களுக்கு மறந்திருக்காதென்று நினைக்கிறேன். சாதாரணமாகவே என் மீது கோபித்துச் சண்டைக்கு வரும் சுபாவமுடையவள் இந்த பொத்தானை நான் மட்டும் அணிந்திருப்பதைக் கண்டு அவள் பொறுப்பாளா! என் அத்தானிடமும் கோபித்துச் சண்டை செய்து, "தேவுதான் உங்களுக்கு உசத்தி. நான் இளப்பந்தானே!" என்று கூறி அழுதாள். "இன்னொருதடவை வரும்போது உனக்குக் கட்டாயம் வாங்கித் தருகிறேன்" என்று அவரும் சமாதானம் செய்துவைத்தார்.

இந்த நிலைமையில் எங்கள் சொந்தக்காரர் வீட்டில் கல்யாணம் வந்தது. என் தங்கை நன்றாக அலங்கரித்துக் கொண்டு கல்யாண வீட்டிற்குச் சென்றாள். நானும் தடபுடலாக உடுத்திக்கொண்டு சட்டையை எடுத்தேன். அவ்வளவுதான்! ஆயிரம் தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டியதுபோல் துள்ளினேன். எப்போதும் பொத்தானைப் பத்திரமாகக் கழட்டி வைத்துவிட்டுக் குளிக்கப் போகும் நான் அன்று தங்கை கல்யாண வீட்டிலிருக்கிறாளே, சீக்கிரம் குளித்துவிடலாம் என்று எண்ணி மடத்தனமாகப் போய்விட்டேன்.

எனக்குமேல் தந்திரமாகக் கல்யாண வீட்டிலிருந்தபடியே எப்படியோ தன் கழுகுக் கண்களால் இதைப் பார்த்துவிட்டவள் லபக்கென்று எடுத்துக் கொண்டுபோய் தன் சட்டையில் அணிந்து வெகு ஒய்யாரமாக விளங்குவதை என் கண்களாலேயே பார்த்துவிட்டேன்.


அந்த ஒன்றரை யணா பொத்தான் அவள் சட்டையில் மின்ன மின்ன என்னுடைய மனத்தில் கோபமும் என் தங்கையை நன்றாக அடித்து நொறுக்கிப் பழி வாங்கி விட வேண்டும் என்கிற அதீத எண்ணமும் அத்தப் பொத்தானை விட அதிகமாக ப்ரகாசத்துடன் எழுந்தது.

என் பொத்தானை என் தங்கை திருடிவிட்டாள் என்ற புகாரை என் பாட்டி, என் தாயார்முதலியவர்களிடம்சொல்லி அதை வாங்கித் தரும்படிக் கேட்டு அழுதேன்.

என் தங்கை எங்கள் வீட்டில் மிகமிகச் செல்லமாக வளரும் பெண்களில் கடைக்குட்டியாதலால் அவள் எந்த காரியத்தையும் தப்பாகச் செய்தால்கூட, "போடா! குழந்தை செய்ததற்கு ப்ரமாதமாகக் குற்றம் கண்டுபிடித்து விட்டாயோ! அவளும் ஆசைதீர இரண்டு நாள் போட்டுக் கொண்டிருந்து கொடுத்துவிடுவாள். பேசாமல் போ" என்று என் வாய்மீதேபோட்டு அடக்கி விட்டார்கள்.

என் தங்கை சம்பந்தி வீட்டாருடன் புகுந்து கொண்டு என்னையும் ஒரு மாதிரி பார்த்தபடியே வந்தாள் அவள் தனியாக என் கையில் அகப்பட்டால்தானே? என்னுடைய ஆத்திரமும் கோபமும் உச்சஸ்தாயில் ஏறிவிட்டது. இருக்கட்டும், எப்படியும்இவள் இரவு படுப்பதற்கு வீட்டிற்குத் தானே வரவேண்டும். அப்போது ஒரு கை பார்த்துவிடுகிறேன்என்று கருவிக்கொண்டே இருந்தேன் (தொடரும்)

# கிழக்கு வெளுத்தது




தானும் பூமாவைத் தொட்டுப் பார்த்துவிட்டு "அப்பாடா! ஜுரம் இப்போது நன்றாகக் குறைந்திருக்கிறது. இன்று காலையில்கூட நெருப்பாகச் சுட்டது. என்னமோம்மா! நீ அவளுக்கு ஓர்ப்படியாக வரப்போகும்பெருமையில் ஜுரம்கூடகுறைந்திருப்பதாகநினைக்கிறேன்" என்று கூறிமுடிப்பதற்குள் பூமா மெல்லக் கண்ணைத் திறந்தாள்.

அவள் வாயில் என்ன வார்த்தைகள் வந்துவிடுமோ! என்கிற பயம் அகிலாண்டம்மாளை ஆட்டி வதைக்கிறது. தானே முந்திரிக் கொட்டைபோல் முந்திக்கொண்டு பூமாவை நோக்கி, "அம்மாடீ! பூமாதேவி! நீ சதா சர்வதா ஆசைப்பட்டுப் பேசிக்கொண்டிருந்த உன் ஓர்ப்படியாகப் போகும் அகல்யாவின் மடியில்தான் நீ படுத்திருக்கிறாய் திடீரென்று இப்படி மயக்கமாகிவிட்டாயேம்மா! இப்போது தெளிந்திருக்கிறதா! அகல்யாவைப் பாரம்மா! இதோ பாஸ்கரன்கூட இருக்கிறான். உன் கணவனும் இருக்கிறான்" என்று பொறியரிசி பொறிவதுபோல் படபடவென்று பொறித்துக்கொட்டி பூமாவை எச்சரிக்கை செய்துவிட்ட சாமர்த்தியச் செயலை புதிதாக வந்துள்ளவர்கள் எப்படி அறியக்கூடும்?

பூமா கண்ணை திறந்தவள் சடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். மான் மிரளுவதுபோல் மிரளமிரள விழிக்கிறாள். ஒன்றுமே புரியவில்லை. இதற்குள் ஸீதம்மாள் சுடச்சுட காப்பியை தானேகொண்டு கொடுத்து "இந்தாம்மா! இதைச் சாப்பிடு. மயக்கம் சற்று தெளியும். அகல்யாவின் தகப்பனார் டாக்டரை அழைத்துவரப் போயிருக்கிறார். உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. பயப்படாதே. இதோ பார் அகல்யா உட்கார்ந்திருக்கிறாள்" என்று பரிசுத்தமான

அன்புடன் கூறி காப்பியை பலவந்தமாகக் குடிக்கச் செய்தாள்.

த்ருசங்கு சொர்க்கத்து நிலையைப்போல் தவிக்கும் பூமாவின் பரிதாபம் யாருக்குத் தெரியும்? உண்மையில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஸௌந்தர்யப் பதுமை போல் வீற்றிருக்கும் அகல்யாவைப் பார்த்ததும் தேகம் பூராவும், ஆச்சரியமும் ஆநந்தமும் ஊடுருவிப் பாய்ந்து இமை அசைக்காமல் நின்றுவிட்டது. வாய் திறக்காமல் எல்லோரையும் ஒருமுறை பார்த்தாள்...“மாமீ! என்னையறியாமல் எப்படியோ மயக்கமாகிவிட்டேன். எல்லோரும் மன்னித்துவிடுங்கள்... இந்த சமயத்தில் இப்படியாகிவிட்டதே என்று கலங்குகிறேன். நீங்கள் எல்லோரும் போய் மங்களகரமாக ஆகவேண்டிய காரியத்தைச் செய்யுங்கள். அம்மா! இவர்களைக் கீழே அழைத்துப்போங்கள்....டாக்டரும் வேண்டாம்...ஒன்றும் வேண்டாம். அகல்யா! நீ பெரிய பாக்கியசாலியாக இருக்கவேண்டும்” என்று தன்னையறியாதபடி கூறிவிட்டாள்.

அகல்: இப்போது நன்ருகத் தெளிந்துவிட்டதா! தலை சுற்றல் ஒன்றுமில்லையே! மாமீ! இதோ பாருங்கள்...ஏன் கண்களில் நீர் வருகிறது உடம்பில் எங்காவது வலி இருக்கிறதா? என்னிடம் சொல்லுங்கள் பயப்பட வேண்டாம்.” என்று பூமாவின் தலைமயிரைக் கோதியபடியே அன்பொழுகக் கேட்டாள்.

அதேசமயம் டக் டக்கென்று பூட்ஸ்ஓசை கேட்க டாக்டர் மேலே நுழைந்தார். அகல்யா வெகு சகஜமான முறையில் “குட்ஈவினிங் டாக்டர்! இந்தம்மாளுக்குஇரண்டுமூன்று நாட்களாக ஜுரமாயிருந்ததாம். ஆனால் இப்போது ஜுரமே இல்லை. திடீரென்று மயக்கமாகிவிட்டார்கள்.” என்று முடிப்பதற்குள், “ஓ! நீதானு முதல்சிகிச்சைகொடுத்துத் தெளியவைத்துவிட்டாய். அவ்வளவுதானே; இதெல்லாம் தெரிந்திருப்பதால் எத்தனை அனுகூலங்களிருக்கிறது பாருங்கள்” என்று கூறியபடியே பூமாவை பார்த்தார்.

அகிலாண்டம்மாளின் அலங்காரத்தையும் முகத்தில் திகில் படித்து அசடுவழியநிற்பதையும் டாக்டர்கூட வெறித்துத் தனக்குள் சிரித்துக் கொண்டார். அகிலாண்டத்தின் மார்பு நிமிடத்திற்கு நூறுமைல் வேகத்தில்ஓடும் மோட்டார் காரைப்போல் அடித்துக் கொள்ளும் ரஹஸ்யம் யாருக்குத் தெரியும். டாக்டர் என்ன சொல்லிவிடுவாரோ! டாக்டரிடம்

பூமா என்ன சொல்லிவிடுவாளோ! என்ற பயம் பேய்போல் பிடித்து ஆட்டும் ரஹஸ்யத்தை யார் அறிவார்கள்.

அகிலாண்டம்மாளின் மனம் துடிக்கும் வேகத்தில் தானே முன்னே வந்து "டாக்டர்! இரண்டு நாட்களாக ஜுரம். தலைவலி, இதைத்தவிர உடம்பெல்லாம் வலிக்கிறது என்று தவித்தாள்"....என்று அசட்டு பிசட்டென்று ஆரம்பித்தாள்.

டாக்டர் எதனாலோ அகிலாண்டத்தின் முகத்தை உற்று உற்று ஏற இறங்கப் பார்த்தார். அவர் பார்க்கப் பார்க்க அகிலாண்டத்தின் மண்டையில் சம்மட்டியாலடிப்பது போன்ற அதிர்ச்சி உண்டாகி வதைக்கிறது. அதோடு விடாமல் டாக்டர் சேஷகிரியை ஒருமுறை உற்றுப் பார்த்தார்...."ஓகோ! உன் மனைவியா...பாஸ்கர் எப்போது வந்தான்? என்னப்பா மவுன சாமியாராக உட்கார்ந்திருக்கிறாய். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் டைபாடு ஜுரத்தில் நீ படுத்திருக்கையில் நான்தானே வைத்தியம் செய்தேன். சரிதான் யார் வீடு என்பது ஒருவாறு புரிந்தது...ஆமாம் இன்று வீட்டில் ஏதாவது விசேஷமா...உன் தாயார்"...என்று முடிப்பதற்குள் சந்திரசேகரன் பரபரப்புடன்..."ஆமாம் ஸார்! இன்று பாஸ்கரனுக்கு இவாளுடைய பெண்ணை நிச்சயம் செய்யும் நல்ல நாள் அதனால் தான்"...என்று இழுத்தார்.

இதற்குள் டாக்டர் பூமாவைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு உடம்பில் ஒன்றுமே இல்லையே! ஏதோ அதிர்ச்சி பலஹீனம் இதனால் மயக்கம் உண்டாகி இருக்கலாம்...... சரி....மருந்து எழுதித் தருகிறேன்...மிஸ்டர் ஸேதுராமன் நானும் அகல்யாவின் நிச்சயதார்த்தத்திற்கு வந்துவிட்டேன். இல்லையா?...பாஸ்கரா...இப்பொழுது என்ன செய்கிறாய்...என்றார்.

இப்பதான் பதாம்கோட்டில் வேலையாகி இருக்கிறது. அடுத்த வாரம் போகவேண்டும். இன்று தெய்வச் செயலாய் உங்களைச் சந்தித்ததிற்கு மகிழ்ச்சி யடைகிறேன் என்று பெருந் தன்மையாகப் பேசினான்.

**ஸேது:** ஏற்கெனவே இந்த சம்மந்தம் செய்யப்போவதைப் பற்றி உங்களிடம் நான் சொல்லி இருக்கிறேனே டாக்டர். அதுதான் இன்று தீர்மானமாகிறது. உங்களுக்குச் சம்மதந்தானே?"

டாக்டர்: "பரிபூர்ண சம்மதம். எனக்கும் அகல்யாவைப் போல் ஒரு பெண்ணிருந்தால் பாஸ்கரனை விடவே மாட்டேன். அவன் என்னுடைய பேஷண்டல்லவா? அவனுடைய குணம் பூராவும் எனக்குத் தெரியும். தவிர அவனுடைய ஆப்த சினேகிதன் சேகர் என்னுடைய அண்ணாவின் மகன்தானே. அவன் மூலமும் நான் தெரிந்துகொண்டேன். வெகு நல்லவாள். கல்யாணம் எப்போது? ஸார் சுபம் சீக்கிரம் என்று முடித்துவிடவேண்டும். பெரியவர்கள் தெரியாமலா இத்தகைய விஷயங்களில் தீர்க்க தரிசிகள் போல் செய்திருக்கிறார்கள்... இன்னொரு கோராமையைப் பாருங்கள். இந்த ஊரில் ப்ரபல சாம்பு சாஸ்த்திரிகளின் மகன் ராமு கல்கத்தாவில் வேலையாகிச் சென்றான். அங்கு ஒரு பஞ்சாபிக்காரப் பெண்ணை மணந்து விட்டானாம். இந்த விஷயம் எனக்கு போன வாரமே தெரியும். சாம்புவிடம் நான் சொல்லவே இல்லை. பாவம் ஒரே மகன். அவன்மூலம் ப்ரமாதமான ப்ரக்கியாதியை அடைய அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள்.

இதைக் கேட்ட பாஸ்கரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. இன்றுதான் இந்த விஷயம் வெளியாகியதாக நாம் நினைத்தோமே. சென்ற வாரமே எப்படியோ பாணம் வெடித்து விட்டதே. இந்த விஷயத்தை டாக்டர் இப்படி பகிரங்கப் படுத்திவிட்டாரே என்று தனக்குள் எண்ணினான். ஆனால் அது விஷயமாக எதுவுமே பேசவில்லை.

அகிலாண்டம்மாளுக்கு இந்த விஷயம் இடி இடித்தது போலிருந்ததால்....பார்த்தீர்களா? இந்த மாதிரி ஆபத்திற்கு ஆளாக்கி விடக்கூடாது என்றதனால்தான் நான் இரவு பகல் நச்சரிக்கிறேன். எங்க பாஸ்கரன் அத்தகைய ஹீன புத்தி உடையவனல்ல. இருப்பினும் நெருப்பையும் காற்றையும் ஒரு இடத்தில் வைக்கலாமோ? என்று தானாகவே பேசி வைத்தாள்.

இதற்குள் சாஸ்திரிகள் தாம்மட்டும் தனியாக இருப்பதை இருமல், தும்மல், களைப்பு முதலியவைகள் மூலம் பலமான சத்தத்துடன் தெரிவித்தார். சமையல் காரனோ மாடிக்கும் கீழுக்குமாக உலாவி உலாவி கால் ஓய்ந்துவிடும் போலாகி விட்டான்

சசி: "நாம் கீழே போகலாமே; பூமாவுக்கு ஒன்றும் பயமில்லையே டாக்டர்" என்று சந்திரசேகரன் கேட்டு முடிப்பதற்குள் டாக்டர் ஏளனமாகப் பார்த்து சிரித்துக் கொண்டே, "சார்! பூமாவுக்கு ஏதாவது உடம்பு இருந்தால்

தானே நான பயம் என்று சொல்வதற்கு, முகத்தை நன்ருக அலம்பிக் கொண்டு கீழே வரச் சொல்லுங்கள். மயக்கங்கூட விட்டுவிடும். இது ஏதோ நடுவில் ஏற்பட்ட அதிர்ச்சியே தவிர வேறில்லை' என்ருர்.

இதற்குள் அகல்யாவே ஈரத் துணியால் பூமாவின் முகத்தை நன்ருகத் துடைத்துவிட்டதோடு, பளிச்சென்று ஒரு குங்குமப் பொட்டையும் தானே வைத்துவிட்டு "வாருங்கள் கீழே போகலாம். நான் பிடித்து அழைத்து வருகிறேன்" என்று கூறியபடியே பூமாவைத் தூக்கி விட்டாள்.

பூமாவின் உள்ளம் நடுங்கும் பரிதாபத்தை அகல்யா வால் அறிய முடியுமா? அகிலாண்டத்தையும் சேஷகிரி யையும் மாறி மாறி பார்க்கிருள். மிரண்ட விழிகளில் பயத்தின் ப்ரகாசம் வீசுகிறதே யன்றி சுய உணர்ச்சி யுடன் பார்க்கும் தன்மையே உண்டாகவில்லை..."அம்மா.... என்னை மன்னித்து விடு. நான் கீழே வரவில்லை. மிகவும் தள்ளாமையா யிருக்கிறது. தலை சுற்றல் வேறு வந்திருக் கிறது....நீங்கள் போய் காரியத்தை நல்ல சுபமாய் மங்கள கரமாய் முடியுங்கள்...அம்மா! இவர்களைக் கீழே அழைத் துப் போங்கள்" என்ருள்.

அகல்யாவின் செய்கையும் அன்புமாரி பொழியும் பார்வையும் வார்த்தைகளும், பாஸ்கரனின் இதயத் தகட் டில் அழியாத எழுத்துக்கள் போல் பதிந்து விட்டன. அகிலாண்டத்திற்கோ சொல்லவும் முடியவில்லை. தன் ஸ்வரூபத்தைக் காட்டவும் முடியவில்லை. ஏனென்ருல் இந்த கல்யாணத்தைக் கட்டாயம் நடத்தியே தீரவேண்டும். அவர்கள் கொடுக்கப் போகும் வரதக்ஷிணைப் பணமாகிய பத்தாயிரம் ரூபாயைத்தான் வாங்கி அப்படியே சேஷகிரி யிடம் கொடுத்து விடுவதாகவும் அந்தத் தொகையைக் கொண்டு அவன் ஒரு வ்யாபாரமோ அல்லது லேவா தேவிக்கடையோ வைத்து வ்ருத்திக்கு வரவேண்டும் என்று தாயும் மகனும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ரகஸ் யம் சந்திரசேகரனுக்குக் கூடத் தெரியாது.

ஆகையால்தான் சேஷகிரியும் வெகுவாய் நடிக்க வேண்டியிருக்கிறது. அகிலாண்டமும் பெட்டிப் பாம்பாய் அடங்கி இருக்க வேண்டியாகிவிட்டது. நாய் வேஷம் போட்டால் குலைத்துத்தானே ஆகவேண்டும். அதையும் மறக்காமல் "அம்மா! பூமாதேவி, உன் ஓர்ப்படி அழைக்கும்

போது அந்த அன்புக்கு நீ கட்டுப்பட்டு மெல்ல இறங்கி வாம்மா!" என்று உள்ளே வயிறு எறிய, உதட்டில் பழம் சொறிய' என்கிற பழமொழிப்படி கூறிவந்தாள்.

அகல்யாவோ பூமாவை விடுவதாக இல்லை. தானே மெல்லப் பிடித்து இழுத்து நடத்திக் கொண்டுவந்து எல்லோருக்கும் முன்னால் கூடத்திற்கு வந்து உட்கார்ந்தாள். பின்னோடு எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். பூமாவின் த்ருசங்கு சொர்க்கம் போன்ற நிலையிலும் அவள் இது வரை கண்டறியாத ஒரு புதிய இன்பமும் ஆனந்தமும் இதயத்தில் ஊறியது. அகல்யாவின் முகத்தையும் புன் முறுவலையும் காணக் காண பூமாவின் முகம் தானாகவே மலர்ந்தது.

அகிலாண்டம்மாள் தயாராக வாங்கி வைத்திருந்த ஆறு கெஜம் சரிகைத் தகடிச் சேலையைத் தட்டில் வைத்து சாஸ்திரிகளிடம் கொடுத்தாள். உடனே ஸேதுராமன் "டாக்டர் ஸார்! எங்கள் பக்கத்து மனிதராக இருந்து இந்த பத்தாயிரம் ரூபாய் செக்கை மாப்பிள்ளையிடம் வரதக்ஷிணையாக ஓதிக் கொடுத்து விடுங்கள்" என்று செக்கை ஒரு கவரில் தயாராக வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்தார்.

இதுவரையில் பேசாமடந்தையாய்—மவுன சாமியாராய் உட்கார்ந்திருந்த பாஸ்கரன் தேள் கொட்டியவன் போலத் துள்ளி எழுந்து..."டாக்டர் ஸார்! மன்னிக்கவேண்டும் இந்த பூரி தக்ஷிணை வாங்கும் அற்பத் தனத்திற்கு என் பெற்றோர்களை இலக்காக்க வேண்டாம். எனக்கு இது விஷயத்தில் கடுகளவு கூட பிடிக்காது. மிஸ்டர் ஸேதுராமய்யர்வாள்! உங்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த வரதக்ஷிணை எனக்கு வேண்டாம். நான் காலணகூட வாங்க மாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று சொல்லியபோது அகல்யாவின் முகத்தில் ஆநந்தமும் பூரிப்பும் சேர்ந்து ஒரே ஜோதியாய் ப்ரகாசித்தது, ஆனால் அகிலாண்டம்மாளுக்கு இரண்டு கண்களும் இருண்டுபோய் உலகமே அந்தகாரத்தில் மூழ்கிவிட்டது போலாகியது.

★

5

## அக்கினி மத்தியில் அன்புத் தளை

பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவன் வகுப்பிற்கு நேரங்கழித்து வருவானானால் வேண்டுமென்றே உபாத்தியாயர் தடபுடலாக அவனை வரவேற்று உபசரிப்பதைக் கண்டதும் பையனின் குலையே நடுக்கமெடுத்து அவனுடைய சப்த நாடிகளும் அடங்கிப் போய், ஏதோ விபரீதம் தனக்குக் காத்திருப்பதாக திகிலடைந்து விடுவான். அதுபோலவே பூமாவின் கதியும் மணிக்கு நூறு மைல் வேகத்தில் செல்லும் மோட்டாரின் எந்திரம் போல் இதயம் அடித்துக்கொள்ளும் நிலைமையில் உயிரற்ற பொம்மைபோல் வீற்றிருந்தாள்.

பத்தாயிரம் ரூபாயின் பரிமாற்றம் வேறு வகையாகத் திரும்பிவிட்ட உடனே சேஷகிரியின் கண்கள் சிவந்தது. சந்திரசேகரர் சற்று திடுக்கிட்டாரேயன்றி இவர்களைப் போல் மூர்ச்சையாகிவிடவில்லை. இத்தனை முகபாவங்களையும் பாஸ்கரன் ஒரு க்ஷணத்தில் பார்த்து நன்கறிந்து கொண்டு எதையுமே தெரியாதவன் போலவே வீற்றிருந்தான்.

சங்கர சாஸ்திரிகள் இந்த விஷயத்தைக் கண்டு ப்ரமாதமாய்ப் பூரித்துப்போய் "அடாடா! என்ன கண்ணியமான கல்யாணம் போங்கள். இந்தப் பாழும் வரதக்ஷிணையை ஒழிக்கவேண்டும் என்று ஒருசிலர் கூக்குரலிடுகிறார்களேயன்றி அவர்கள் என்ன செய்ய முடியும்? இதைக் கட்டாயத்தின்மீது ஆதரிக்கும் கூட்டமே அதிகம். சென்ற வாரம் ஒரு ப்ரம்மாண்டமான கல்யாணத்தை நான்தான் நடத்திவைத்தேன். என்ன ரஸாபாஸம் போங்கள். நினைத்தால்கூட பிடிக்கவில்லை. சகல சடங்குகளும் நடக்கும் சமயம் வரதக்ஷிணையின் மிச்சத் தொகையை முகூர்த்தத்திற்குள் கொடுக்கவில்லை என்ற சண்டையைக் கிளப்பியதோடு விடாமல் பந்தலில் வைத்துள்ள வெள்ளி-எவர்ஸில்வர் பாத்திரங்களைத் திராசுகொண்டு எடைபோட ஆரம்பித்துவிட்டார்கள்.

கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் இந்தச் செய்கையை வெறுத்ததுடன் வாக்குவாதமும் வலுத்துவிடும்படி யாகிவிட்டது. கல்யாணப் பிள்ளையின்

சிநேகிதர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். அவர்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமே. பரிதாபம், பரிதாபம். கல்யாணப் பிள்ளை ஒரு அதட்டுப் போட்டான். ஸ்வாமி களே! நானே பயந்து நடுங்கிவிட்டேன். "உம். சீக்கிரம் முகூர்த்தம் ஆகட்டும்" என்று கர்ஜித்ததுதான் தாமதம். தடதட வென்று மந்திரத்தைச் சொன்னேன். பிள்ளை யின் பிதாவோ என்னை முறைத்துப் பார்த்து நிறுத்தும் படிச் சொன்னார். நான் பிள்ளைக்குப் பயப்படுவதா! பிதா வுக்குப் பயப்படுவதா! ஏதோ! கடவுள்மீது பாரத்தைப் போட்டு கல்யாணத்தை முடித்துவிட்டேன். தாலி கட்டு வதற்கு முன்பே பிள்ளை வீட்டார் வெகு துணிச்சலுடன் போய்விட்டார்கள். முகூர்த்தமாகிய உடனே அழகாகச் சாப்பிட்டுவிட்டு பையன் பெண்ணை அழைத்துக்கொண்டு போய்விட்டான். எப்படி சந்தி சிரிக்கிறது நம்முடைய சமூகம் பாருங்கள்" என்று எந்திரம்போல் சொல்வதைக் கேட்கக் கேட்க பாஸ்கரனின் முகத்தில் பலவித உணர்ச்சி களின் ரேகை படிந்து பொலிவையே இழக்கும்படிச் செய்தது.

அகல்யாவின் முகமோ! பாஸ்கரனின் சந்திர வதனம் சுருங்கும் மின்னல் தாக்குதல்களையே கவனித்துத் தலைக் கவிழ்ந்தது. இந்த மாறுதல்களை எல்லாம் ஸேதுராமனும் கவனித்ததோடு அகிலாண்டம்மாளின் முகத்தின் போக் கையும் நன்றாகப் பார்த்தார்.

இவர்கள் எல்லோரையும் விட பூமாவின் கண்கள் தான் அங்குள்ள அத்தனை பெயர்களின் உணர்ச்சிகளை யும் முகபாவங்களில் ப்ரதிபலிக்கும் வேகமான பாவங்களை யும் ஒரு நொடியில் அறிந்துகொண்டதுதான் தாமதம். "என்னால் உண்டாகிய பெரும் புயல் நீங்குவதற்குள் பாழும் வரதக்ஷிணை என்கிற பேயால் இன்னும் என்ன விபரீதம் உண்டாகிவிடுமோ! கல்யாண தம்பதிகளின் மனமொன்று பட்ட அன்புச் சங்கிலியை இந்த மகத்தான கொடுமைகள் எங்கு பாதித்துத் தாக்கிவிடுமோ! பகவானே! தம்பதி களின் ஆழமான ப்ரேமைக்கு பங்கம் விளைவிக்காமல் காப்பாற்ற வேண்டும். என்னைப் போன்ற பாவிகளை இந்த உலகத்திலேயே இனி பிறப்பிக்காதே. உன் திருவடிகளை வணங்கி பதினாயிரம் முறை வணங்குகிறேன்" என்று இதய பூர்வமான உணர்ச்சியுடன் ப்ரார்த்தனை செய்த படியே உட்கார்ந்திருந்தாள்.

சில வினாடிகள் நிசப்தமும் ஒருவிதமான பயங்கரமும் குடிகொண்டுவிட்டது. அகிலாண்டம்மாளுக்கோ! தனக்கு

இப்போது மூச்சு வருகிறதா! நின்றுவிட்டதா! தான் உயிருடன்தான் நின்றிருக்கிறேமா! என்கிற தடுமாற்றமே உண்டாகித் துவண்டுபோய் கம்பத்துடன் சாய்ந்து விட்டாள்.

உண்மையில் ஸேதுராமனைவிட பாஸ்கரனுக்கு இந்தக் கோளாறுகளின் தாக்குதல் மின்ஸாரம் போல் பாய்ந்து உலுக்கிவிட்டது. அகல்யாவின் முகத்தைப் பார்க்கிறன். பூமாவின் துடிதுடிக்கும் உள்ளத்தின் ரேகை சாயல் படர்ந்துள்ள முகத்தையும் பார்க்கிறன். சில விநாடிகளுக்குள் ஒரே அயோமயமான நிலைமை சூழ்ந்து சந்தோஷமே ஊற்றெடுத்துப் பொங்கிய இதயங்களில் சூனியம் தாண்டவமாடும்படி யாகிவிட்டதை அவனல் பொறுக்கவே முடியவில்லை. அன்று காலையில் தன் அண்ணனும் தாயாரும் பேசிய இடிமுழக்கம் போன்ற விஷயத்தின் பயங்கரம் வேறு அந்தகாரம் போன்ற இருள் சூழ்ந்து பாதிக்கின்றது. அதன் மர்மமோ! விவரமோ! ஒன்றுமே புரியாத நிலையில் தவிப்பதைத் தவிர அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. குழம்பித் தவிக்கும் சமயம் யாழினும் இனிய குரலால் அகல்யா தன் பிதாவை நோக்கி, "அப்பா! 5 மணிக்கு நீங்கள் ஒரு முக்யமான கூட்டத்தில் இருக்க வேண்டுமே! மணி 5 அடிக்கப் போகிறதே! இது விஷயத்தைப் பிறகு பார்க்கலாம். நீங்கள் கிளம்புங்கள்....மாமி! நாங்கள் போய்வருகிறேம். நாளை இதைப்பற்றி அப்பா பேசுவார்" என்று கூறியபடியே எழுந்து நின்ற ஆச்சரியம் அங்குள்ள அத்தனை பேர்களுக்கும் அதிர்ச்சியாகமாறி திடுக்கிடச் செய்தது.

இம்மட்டுடன் நிற்காமல் அகல்யா பூமாவைப்பார்த்து... "நாங்கள் வருகிறேம். உடம்புக்கு ஒன்றும் இல்லையே. அப்படி ஏதாவது இருந்தால் டாக்டருக்குத் தெரிவியுங்கள்.... நாங்கள் போய் வருகிறேம்...." என்று பாஸ்கரனைப் பார்த்துக் கண்களில் நீர் குளம்போல் ததத்தளித்தவாறு கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்லியபடியே தடதட வென்று பத்தடி நடந்துவிட்டாள்.

இந்த உள் ரகஸ்யம் தெரிந்தும் தெரியாமலும் தருணங்கு நிலையிலுள்ள புரோகிதர் தமது கடமையை விடாமல், "அம்மா! குழந்தை! நில்லம்மா! நிச்சயதார்த்தத்தை அரை நொடியில் முடித்துவிட்டுப் போகலாம். பத்து நிமிடம் தாமதமானல் பரவா இல்லை. இப்படி வந்து உட்கா

ரம்மா! தாம்பூலம் வாங்கிக்கொண்டுதான் போகவேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

அதே சமயம் சந்திரசேகரர் வெகு தைரியத்துடன், "சாஸ்ரிகளே! நடக்கட்டும்" என்ருர். பாஸ்கரனும், "ஆகட்டும் சாஸ்ரிகளே!" என்று சொல்லி ஸேதுராமனை நோக்கி, "ஸார், மன்னிக்க வேண்டும். உங்களை பத்து நிமிடத்தில் அனுப்பிவிடுகிறேன். அம்மா! ஏன் இப்படி நிற்கிருய். அவர்கள் முக்யமான இடத்திற்குப் போக வேண்டாமா?.. ...அகல்யா...இப்படி வந்து உட்காரு..." என்று யாருமே எதிர்பார்க்காத வண்ணம் கூறியதைக் கேட்டு சிலர் திடுக்கிட்டார்கள். சிலர் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினர்கள்.

'அன்னப் பேடோ! ஆடும் மயிலோ!' என்று ஐயுறும் படியான எழிலுடன் அகல்யா பதுமைபோல் வந்து அமர்ந்தாள். உடனே சாஸ்த்ரிகளின் பீரங்கி த்வனியில் பஞ்சாதி முழக்கம் கிளம்பியது. "நிச்சயதார்த்த சுப முகூர்த்தத்தில் மாமனருடைய ஆசீர்வாதம்" என்று ஓதியிட்டுத் தட்டை அகல்யாவிடம் கொடுத்தார்.

உள்ளுக்குள் எத்தனை பயங்கரமான புயல்கள் கோரத் தாண்டவமாடிய போதிலும் அவைகளை ஓரளவு மறைத்துக் கொண்டு "உள்ளே வயிறு எரிய, உதடு பழம் சொரிய" என்ற பழமொழிப்படிக்குத்தான் ஓடிச் சென்று தட்டை வாங்கிக் கொண்டு "வாடியம்மா! அந்த அறையில் போய் சேலையைக் கட்டிக்கொண்டு வரலாம்" என்று கூறி அகல்யாவை அழைக்கச் சென்ருள்.

இதைக் கண்டு வந்த சிரிப்பை படித்தப் பெண்ணுயினும் அடக்க முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அடுத்த நிமிடமே ஜகன் மோகன வடிவழகுடன் அகல்யா புதிய உடை அணிந்துகொண்டு வந்தாள். தன்னையும் மறந்த சந்திர சேகரன் "அம்மணி! இப்படி ஊஞ்சலில் பயலின் பக்கத்திலேயே உட்காரு...அகிலாண்டம்! ஆரத்தியும் ஒரு தேங்காயும் கொண்டுவா" என்ருர். அகிலாண்டம்மாள் ஆரத்தி தட்டுடன் வந்து நின்றதும் ஸீதம்மாளை ஜாடையாய் அழைத்தாள்.

பலே கெட்டிக்காரியான ஸீதம்மாள், பூமாவைத் தட்டிக் கொடுத்து "பூமா! நீ போய் ஆரத்தி எடம்மா! எழுந்திரு," என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்தாள். தர்ம சங்கடமான நிலைமையில் தவிக்கும் பேதைப் பெண் என்ன செய்வாள் பாவம். உடல் நடுங்குகிறது.

கால்கள் தள்ளாடுகிறது. எத்தனை தரம் மறுத்துச் சொல்லி யும் கேளாது ஸீதம்மாள் இழுத்துக் வந்து நிறுத்தினாள்.


அகிலாண்டத்தின் பயங்கர பார்வைகளாகிய பாணங்க ளால் மான்போல் மிரண்டு விட்ட பூமா ஒன்றுமே சொல்ல முடியாமல் தட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அகிலாண்டம்மாளும் திருடனுக்குத் தேள் கொட்டியது போல் வாயைத் திறக்காமல் ஆரத்தியைச் சுழற்றும் வேகத்தில் தன் புடவையிலேயே சிந்திவிட்டது கண்டு மனங் கலங்கியபடி மங்களம் பாடுவதாக பாவத்துடன் முணு முணுத்தவாறு ஆரத்தியைச் சுற்றி முடியும் சமயம் தானே வேண்டுமென்று தட்டைவிட்டுவிட்டு, "அடி அசடே இப்படியா அபசகுனம் போல் தட்டை விடுவது புத்தி இல்லையா? உனக்கு" என்று தினம் பாடும் பல்லவியைச் சடக்கென்று பாடிவிட்டாள்.

இதற்குள் "இதனாலென்ன, பரவாயில்லை. இதெல்லாம் நல்ல சகுனந்தான். சந்தனம், குங்குமம், ஆலத்தி இவை கள் தவறி கொட்டினால் மிகவும் சுப சகுனம். திட்டா தீர்கள்" என்று தம்பதிகளின் தலையில் அக்ஷதையைப் போட்டவாறு தன் தலையிலும் போட்டுக் கொண்டார். ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து சாஸ்த்திரிகளிடம் ஸேதுராமன் நீட்டியதுடன் இரண்டு 10 ரூபாய் நோட்டுக் களை எடுத்து 'ஆரத்தித் தட்டுக்காக'என்றுகூறி அகிலாண் டம்மாளிடம் நீட்டினார். கழுகு அடிப்பதுபோல் அந்த நோட்டுக்களை சேஷகிரி வாங்கிக்கொண்ட அற்பத் தனத் தைக் கண்டு பாஸ்கரன் வெறுத்தான். சாஸ்த்திரிகளின் சந்தோஷம் உச்சத்தை எட்டியது.

சில நிமிஷங்களில் சகலமும் முடிந்துவிட்டபிறகு ஸேது ராமன் எல்லோருக்கும், நமஸ்காரம் செய்தபடி, "நான் இந்த சமயம் அவசரமாகப் போகவேண்டி யிருப்பதால் மன்னிக்க வேண்டும். இன்று இரவு 8 மணிக்கு நான் மறுபடியும் வருகிறேன். மிஸ்டர் பாஸ்கரன் நான் வரட் டுமா?"...என்று மிகக்கம்பீரமும் அன்பும், வணக்கமும் த்வ னிக்கக் கூறினார்.

பெரிய படிப்பு படித்த பெண்ணாயினும் கர்வமின்றி எல்லோருக்கும் நமஸ்காரம் செய்து விடை பெற்றாள். பாஸ் கரனையும் பார்த்து "நான் வருகிறேன்" என்று கூறும் போது எதனாலோ அவள் தொண்டை அடைத்து நாவும் தழதழத்தது. ப்ரத்யேகமாய் பரதேசிபோல் நிற்கும் பூமா விடம் ஓடிச் சென்று "நான் வரட்டுமா! நீங்கள் தைரியமாக

இருங்கள். நாளைக்கு நான் காரை அனுப்புகிறேன். நீங்கள் வாருங்கள். ஏன் இப்படி உடல்நடுங்குகிறது கண்ணீர் முட்டு கிறது"என்று கூறியபடியே பூமாவை தோள்மீதுபோட்டுத்



தட்டியவாறு அன்புடன் கேட்டாள். பூமாவின் ஜன்மத் தில் இத்தகைய அன்புச் சொல்லை—செயலைக் கண்டதில்லை யாகையால் அவளுடைய நெஞ்சை ஆனந்தத்தின் வேகமும்

தன் விதியின் விளையாட்டின் பயங்கரமும் சேர்ந்து அழுத்தி வாயை அடைக்கச் செய்தது.

அகல்யாவுக்கோ இந்த பரிதாப உணர்ச்சி உள்ளத்தைத் தொட்டு நெஞ்சை அள்ளிக் கண்ணீரைக் கக்கச் செய்தது. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் முகத்தைத் திருப்பி சமாளித்தாள். இந்த செய்கையைக் கொடிய விஷக்கண்களால் பார்க்கும் சேஷகிரிக்கும் அகிலாண்டத்திற்கும் அடிவயிற்றில் இடி இடித்தது போலிருந்தது. ஸேதுராமன் வாசலிலிருந்து அகல்யாவைக் கூப்பிடும் சத்தம் கேட்டு, "மாமீ நான் வருகிறேன்" என்று பூமாவிடம் கூறிக்கொண்டு வரும் வழியில் நிற்கும் பாஸ்கரனின்மீது தனது இதய பூர்வமான அன்பைக் கண்களாகிய பாணத்தின் மூலம்வீசிவிட்டுப் புள்ளிமான்போல் துள்ளிச்சென்று காரில் அமர்ந்தாள். அடுத்த வினாடியே காரும் பும் பும் சங்கீதத்துடன் கிளம்பியது.

ஒப்புக்காக வழியனுப்பச் சென்ற அகிலாண்டம்மாள் துர்கா தேவதையைப்போல் கண்களில் நெருப்புப் பொரி பறக்க உள்ளே வந்தவள் நேரே தடதடவென்று பூமா இருக்கும் விடுதிக்குச் சென்று "சண்டாளி! பாவி! என் குடியைக் கெடுக்க வந்தக் கோடாறிக் காம்பே உன்னுடைய மானங்கெட்டச் செய்கையைப் பிறர் அறியாதிருக்கும் பொருட்டு உன்னை உள்ளே தள்ளி வைத்திருந்தும் சொக்கு பொடி போட்டு மயக்கி எப்படியோ என் பாஸ்கரனை".... என்று முடிப்பதற்குள்சேஷகிரி ஆவேசத்துடன் ஓடிவந்து பூமாவைக் கண்ணுமண்ணு தெரியாமல் அடித்தும், காலால் உதைத்தும், இம்சித்தபடியே "கொலை பாதகி! த்ரோகி"... என்று இன்னும் ஏதேதோ சொல்லுவதற்குள், கார் மறையும் வரையில் வாசலில் நின்று பார்த்துக்கொண்டிருந்த பாஸ்கரன் உள்ளேவந்தான். இந்த எதிர்பாராத சதிகாரச் செய்கையைக் கண்டு உள்ளம் துடிதுடித்து வெடித்துவரும் ஆத்திரத்துடன், "அண்ணா! நிறுத்து உன் அசுரச் செய்கையை. அம்மா! உனக்குமா புத்தியில்லாமல் குழம்பிப் போய்விட்டது. அனியாயமாய்—அபாண்டமாய்—அக்ரமமாய் நீங்கள் பேசியும் இம்சித்தும் ஒரு நிரபராதியைக் கொலை செய்யவா துணிந்துவிட்டீர்கள்? சட்...வெளியே போங்கள்...அப்பா! இந்த அட்டூழியத்தை அடக்க உங்களுக்குச் சக்தி இல்லையா? இந்த அனியாயச் செய்கையின் முன்பு பெரிய மனிதர்களின் சம்மந்தத்தைவேறு நீங்கள் நாடுவது வெட்ககரமான—என், துக்ககரமான துங்கூட—செய்கையாகும். ஒரு நிரபராதியை இப்படி அனியாயப் பழி

சுமத்தி அடித்துத்துன்புறுத்திவதைத்தால் வெகுவிரைவில் கொலைபாதகம் நம்மைத் தேடிக்கொண்டு வந்துவிடும். வீட்டிற்குப் பெரியவர்களாகிய நீங்கள் இதைக் கண்டிக்க வேண்டாமா? ஊரார் வீட்டு சொத்திற்குப் பேயாய்ப் பறக்கும் அற்ப புத்தியில் நியாய அனியாயங்கூட மறந்துவிட்டதா?" என்று தன்னைமீறி கத்தியவாறு சேஷகிரியின் கையைப் பிடித்து இழுத்து வெளியில் விட்டதோடு தன் தாயாரையும் தரதர வென்று இழுத்து வந்து கூடத்தில் நிறுத்தினன்.

சேஷகிரிக்கு வந்த ஆத்திரத்தில் தன்னையே மறந்து வெறிபிடித்த நாய்போல் பாய்ந்து பாஸ்கரனின் கன்னம் புடைக்க, அவனே கதிகலங்கித் துடிக்கும்படியாய் அடித்து விட்டதோடு "கொலைபாதகமாடா நடக்கும்? ஆமாம். கொலை பாதகத்தைவிட அக்ரமமான செய்கையை நீ மனந்துணிந்து செய்கிற உத்தம சிகாமணியல்லவா? சீகாமணி ... அண்ணன் மனைவியைப் பெண்டாளும் பாதகத்தைவிடவா கொடியது என் மனைவியை நான் கண்டிப்பது? ... ஜாக்கிரதையடா பாஸ்கரா! ஜாக்கிரதையாகப் பிழைக்கக் கற்றுக் கொள்ளு. ஐ. ஏ. எஸ். படித்துப் பெரிய உத்யோகஸ்தனுகி விட்டதனுலேயே உன்னுடைய அழுக்கு நீங்கிவிட்டதாக நினைத்துக் கர்வப்படாதேடா! ராஸ்கல்.." என்று கண்டபடி திட்டிவிட்டு சற்றும் அங்கு நிற்காமல் விடுவிடு என்று வெளியே போய்விட்டான்.

இந்த செய்கை பாஸ்கரனுக்கு எரிமலையே தன் தலையில் புரண்டு விழுந்துவிட்டது போன்ற அதிர்ச்சி உண்டாகியதால் சிலவினடிகள் தன் ஸ்மரணையற்றுத் தம்பித்து விட்டான். இத்தனை கலகங்களுக்கும் ஆஸ்பதமாக நின்ற அகிலாண்டம்மாளின் கலங்காத கருங்கல் நெஞ்சத்திலும் ஒருவித மின்னல்தாக்குதல் தோன்றி "ஐயோ!ஹா...பாஸ்கரா!" என்று நடுங்கச் செய்துவிட்டதென்றல் பரிதாப பிம்பமாகிய அபாக்கியவதியான பூமாவுக்கு எப்படித்தானிருக்குமென்று அளவிட்டுக் கூறமுடியுமா?

சேஷகிரி மிருகத்தனமான ஆவேசத்துடன் அடித்துத் தள்ளிய அதிர்ச்சியில் மூக்கில் கடகடவென்று ரத்தம் கொட்டுவதை ப்ரக்ஞை அற்றுக் கிடக்கும் பூமாவும் அறியவில்லை. பத்ரகாளி ஸ்வரூபத்துடனுள்ள அகிலாண்டமும் கவனிக்கவில்லை. பாஸ்கரன் சிலவினடிகள் கழித்துத் தன்னைத்தான் சமாளித்துக்கொண்டு பார்க்கும்போது தன் அண்ணன் ஆவேசத்துடன் ஓடுவதையும், பின்னலேயே "சேஷகிரி சேஷகிரி" என்று அலறியவாறு தன் தாயார் ஓடுவதையும் கண்டான். இவ்விருவர் பின் ஓடுவதா? கண்

ணீர் வழிய தன் கன்னங்களை கையால் அமுக்கியவாறு நிற்கும் பாஸ்கரனைத் தேற்றுவதா? அல்லது பூமாவைக் கவனிப்பதா? என்று புரியாமல் சந்திரசேகரர் குட்டியிட்ட பூனையைப்போல் தவித்தார்.

தற்செயலாக பூமாவை உற்றுநோக்கிய பாஸ்கரன் ஒரே ஓட்டமாக ஓடிச்சென்று பூமாவை சிறுகுழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி வேறு இடத்தில் கிடத்தியபடி.... "அப்பா! உங்களுடைய அசட்டுத்தனத்திலுைம் அம்மாவுக்கு நீங்கள் இடங்கொடுத்து, நடுங்கிய முறையில் வாழ்க்கையை நடத்துவதாலும்தான் அம்மாவின் அனியாயம் தலைக்கேறி அந்தகார இருள்மூடிய நிலையில் குடும்பத்தின் கண்ணியமே சிதறிப்போய் ஊர் சிரிக்கும்படியாகி விட்டது. ஐயயோ! மன்னியின் மூக்கிலிருந்துவரும் ரத்தத்தைத் பாருங்களேன். என் தலை சுற்றுகிறதே. அவள் உயிர்கூட போய்விடும் போலிருக்கிறதே. சீக்கிரம்போய் டாக்டரை அழைத்து வாருங்கள். அனியாயக் கொலைதான் நடக்கப்போகிறது. சேஷகிரிமூர்க்கத்தனமாய் அந்த உத்தமியை அடித்துவிட்டு ஓடியிருக்கிறான். போங்களப்பா! போங்கள்"......என்று தவித்தபடியே, ஈரத்துணியை சொட்டச்சொட்ட பூமாவின் மூக்கில் வைத்து அழுத்தியவாறு அவளைத் தூக்கித் தன் மடியில் என்றுமில்லாத தைரியத்துடன் படுக்கவைத்துக் கொண்டான்.

பாவம். அப்பாவி மனிதனுகிய சந்திரசேகரனுக்கு இடி இடித்தது போன்ற அதிர்ச்சியும் மூளை குழப்பமும் உண்டாகிவிட்டதே யன்றி ஒன்றுமே தோன்றவில்லை. இதே சமயம் அகிலாண்டம்மாள் உள்ளே வந்து இந்தக் காக்ஷியைக் கண்டதும் தீயை மிதித்தவள்போல் துள்ளிக் குதித்துத் தாண்டவமாடித் தலையில் பட்டார் பட்டார் என்று அடித்துக்கொண்டு பாஸ்கரனையும் பூமாவையும் சேர்த்துத் திட்டும் சமயம், யாருமே எதிர்பாராதவிதமாய் அகல்யாவும் அவள் தாயாரும் அங்கு மயில்போல் வந்து நிற்பதைக் கண்டு அகிலாண்டம்மாளின் வாயே—ஏன் மூச்சே அடைத்துவிட்டது.

"மாமீ! நான் புடவை மாற்றியபோது தங்க பெல்டை மறந்துபோய் உள்ளே வைத்துவிட்டேன். அதைக் கொண்டுபோக வந்தோம்...." என்று குயிலினும் இனிய குரலில் சொல்லியவாறு கூடத்தில் வந்துவிட்டதைக் கண்ட பாஸ்கரன், அளவு மீறிய ஆவேசம், ஆச்சரியம், ஆனந்தம் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவனுய், அகல்யாவைப்

பார்த்து, "அகல்யா! நான் பரம சந்தோஷப்படுகிறேன். இப்படி வந்து மன்னியை சற்று பாரு. மயக்கமாக விழுந்து விட்ட வேகத்தில் மூக்கில் ரத்தம் கொட்டுகிறது" என்று பயந்து நடுங்கியவாறு சொல்வதைக் கேட்ட தாயும் மகளும், ஒரே ஓட்டமாகச் சென்று பூமாவைப் பார்த்தார்கள்.

ப்ரேதக் களைசொட்ட துவண்டு விழுந்து கிடக்கும் பூமாவைப் பார்த்ததும் தாங்கமாட்டாத பரிதாபமும் பயமும் மேலிட்டு, மளமளவென்று அகல்யாவின் அரவிந்த மலர்க் கண்கள் நீரை உதிர்த்துவிட்டன.

யாருமே எதிர்பாராத விதமாக அகல்யா உள்ளேச் சென்று, "மிஸ்டர் தயவு செய்து எழுந்திருங்கள். தாமதிக்கவே கூடாது." என்று கூறியபடியே பூமாவை அலக்காகத் தூக்கிக்கொண்டு காரில் ஏறிவிட்டாள். கார் அடுத்த நிமிடமே பறந்து சென்றது. தலையிலடித்துக் கொண்டு அலங்கோல காக்ஷியுடன் நிற்கும் அகிலாண்டம்மாளுக்கு இந்த மின்னல் தோன்றி மறைவது போன்ற செய்கையைக் கண்டதும் ஒன்றுமே புரியாமல் விழிக்கும் வினுடிக்குள் ப்ரமை பிடித்துவிட்டவள் போன்ற நிலையில் வீதிக்கு ஒரே ஓட்டமாக ஓடினாள். எதிர் வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் இவளையே நின்று பார்க்கும் பார்வைகளாகிய பாணங்களின் துளைப்புத் தாங்காமல் அம்பு பாய்ந்து துள்ளும் புலிபோல் உள்ளே ஓடிச் சென்றாள். அயோமயமான நிலையில் உலகமே சுற்றுவதே போல் தோன்றியது.

★

## 6

### சூறாவளியும் சுழல் காற்றும்

வீட்டைவிட்டு ஓடிய சேஷகிரிக்குத் தான் எங்கே ஓடுவது? என்ன செய்வது? என்கிற விவரமே புரியாத நிலையில் தலைதெறிக்கக், கால்கள் சென்ற திக்கில் நடந்தான். அவன் மனத்தில் எழுந்து வதைக்கும் சூறாவளியின் அவஸ்தையில் அவனுக்கு எதிரில் வரும் மனிதர்களோ, வண்டிகளோ எதுவுமே தெரியவில்லை. இவன் ஏதோ வெகு அவஸரமான காரியத்தை நோக்கிச் செல்கிறான் என்று பிறர் நினைத்

தார்களே யன்றி, இவனைப் பிடித்து ஆட்டும் பேராசைப் பிசாசின் தாண்டவம், சந்தேக அரக்கனின் நிர்த்தனம், ஏமாற்றத்தின் எதிரொலி முதலிய அக்ரமங்களை யாரால் அறியமுடியும்?

கடிவாளம் அறுபட்ட குதிரையைப் போல் மனத் துடிப்பின் வேகத்துடன் சுமார் இரண்டு மைல் தூரத்தைக் கடந்துவிட்டான் என்பதை ரயில்வே ஸ்டேஷனின் இரைச்சலும் ரயிலின் கதறலும் அவனுக்கு விளக்கிய போதுதான் சற்று ஆத்திரம் அடங்கியவனாய், 'அடடா ரயிலடிக்கா வந்துவிட்டோம்?' என்று தன்னைத் தானே கேட்டபடி திடுக்கிட்டு நின்றான்.

அதே சமயம் ரயிலடியிலிருந்து கையில் பெட்டியுடன் இறங்கிவரும் ஒரு பேர்வழி சேஷகிரியைப் பார்த்து, "டேய்! பழி! ரயிலடிக்கு வருவாய் என்று எதிர்பார்த்து, இத்தனை நேரம் அங்கு தேடு தேடென்று தேடிவிட்டு வருகிறேன். நீ என்னடா என்றால் காசி யாத்திரைப் போகும் மாப்பிள் ளையைப்போல் ஒய்யார நடை போட்டுக்கொண்டு இப்படி காக்ஷியளிக்கிறாய்... சேஷகிரி! நீ எழுதியபடி இன்று காரியம் முடிந்துவிட்டதா? பணம் கைக்கு வந்து விட்டதல்லவா? எவர்ஸில்வர் பிஸனஸை ஆரம்பிப்ப தென்று நாம் செய்த தீர்மானத்தின்படி கம்பெனிகளுக்கு ஆர்டர் அனுப்பிவிட்டோம். உன்னை நேரில் கண்டு விஷ யத்தை அறியவே உடனே வந்தேன்" என்று மடமட என வார்த்தைகளைக் கொட்டி யளப்பதைக் கண்ட சேஷகிரியின் தலையில் செம்மட்டியாலடிப்பது போன்ற வேதனை உண்டாகி விட்டது. தான் வெகு நிச்சயமாக பத்தாயிரம் ரூபாய் வரும் என்று நம்பி புதிதாக ஆரம்பிக் கப் போகும் வியாபார ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு விட்டதால் இப்போது என்னவிதமான பதில் சொல்வது என்று தெரியாமல் குழம்பித் தவிக்கிறான்.

ஏற்கெனவே 'துர்பிணி' மேலும் 'கர்பிணி' என்கிற பழமொழிப்படிக்கு சேஷகிரியின் நிலையை விளக்கி விட் டது. அவன் முகத்தில் தாண்டவமாடும் அவக்களையைக் கண்ட பேர்வழி, "டேய்! என்னடா திருகத்திருக விழிக்கிறாய். காரியம் ஏதாவது தோற்றுவிட்டதா, என்ன? உன் தம்பி இங்கு வந்தானா? அல்லது அப்படியே ஊருக் குப் போய்விட்டானா? என்னடா நடந்தது? சொல்லு.." என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டான்.

இவ்விருவர்களின் கூட்டங்களில் சேர்ந்துள்ள ஒரு சிலர் இவர்கள் இங்கு நின்று பேசுவதைக்கண்டு தாமும் வந்து கலந்து கொண்டார்கள். சேஷகிரியின் நிலைமையில் அவனுல் பேசவே முடியாமல் போயிற்று. ஊரிலிருந்து வந்தவனை மெல்ல சால்ஜாப் செய்து அழைத்துக்கொண்டு நேரே ஓட்டலுக்குள் நுழைந்தான்.

சேஷகிரியின் எண்ணம் பூராவும் வந்தவனை எப்படியாவது தட்டிக் கழித்து அனுப்பிவிட வேண்டுமென்று தோன்றியதால் ஓட்டலிலேயே ஒருதனியறையை வாடகைக்குப் பேசினன். இதைக்கண்ட, வந்த மனிதன் "நீ வேண்டாமப்பா! நான் இரவு வண்டிக்கே போக வேண்டும். வா உன் வீட்டிற்கே போகலாம். அல்லது கோகிலாவின் வீட்டிற்குப் போகலாம்" என்று கூறியபடி வீதிக்கு வந்துவிட்டான்.

சேஷகிரியின் நிலைமை பின்னும் விவரிக்க முடியாத விதம் வேதனைக் கடலில்ஆழ்ந்திவிட்டது. தன்வீட்டிலுள்ள நிலையில் இவனை அழைத்துச் சென்ருல் அதைவிட வேறு வினையே வேண்டாம். தவிர இப்போதுள்ள மன நிலையில் கோகிலாவின் வீட்டிற்குப் போகவும் பிடிக்கவில்லை. தர்ம சங்கடமான நிலைமையில் தவித்தபடியே "கோபு! நீமுதலில் கோகிலாவின் வீட்டில் போயிரு. நான் தற்சமயம் மிகவும் ஏமாற்றமான நிலைமையில் இருக்கிறேன். என்னுல் விஷயத்தை விவரமாகச் சொல்லமுடியாது. தயவுசெய்து இச் சமயம் மன்னித்துவிடு. நான் கூட்டுறவு வியாபாரத்தில் கையொப்பமிட்டுள்ளபடி எப்படியும் என் பங்கிற்கானத் தொகையை வெகு சீக்கிரத்திலேயே செலுத்திவிடுவேன். என்னிடம் நம்பிக்கையுடன் இச்சமயம் விட்டுக்கொடுத்துக் காப்பாற்று. நான் இரண்டு மூன்று தினங்களுக்குள் உன் வீட்டிற்கே வருகிறேன். என் வீட்டில் இன்று எதிர்பார்த்தபடி நடக்காமல் எதிர்பார்க்காத சிக்கல்கள் நடந்துவிட்டதைக் குறித்து வருந்துகிறேன், நான் வருகிறேன்" என்று கூறியபடி பதிலுக்கும் எதிர்பார்க்காமல் தடதட வென்று நடையைக் கட்டினன்.

இவன் இம்மாதிரி போய்விடுவான் என்று சற்றும் நினைக்காத கோபு ஒரே ஓட்டமாக ஓடிப் பின்தொடர்ந்தவாறு கூப்பிட்டான். ஆனுல் அடுத்தடுத்துள்ள சந்துகளில் சேஷகிரி நுழைந்து மாயமாய் மறைந்துவிட்டதால் அவனைக் கண்டுபிடிக்கவே முடியாமல்உண்மையில் 'ஷாக்'கடித்தவன் போல் நின்ருன்.

உடனே ஒரு வண்டியமர்த்திக்கொண்டு சேஷகிரியின் வீட்டிற்குச் சென்றான். இதற்குள் சேஷகிரி அங்கு வந்திருக்கமாட்டான் என்பது இவனுக்குத் தெரியும். இருப்பினும் தன்னை ஏமாற்றிவிட்டுச் சென்றவனைத் தானும் ஏமாற்றமடையும்படியாகச் செய்துவிட வேண்டுமென்கிற எண்ணமே தலைதூக்கி நின்றதால் சேஷகிரியின் வீட்டையடைந்ததும் வாசலில் ஆரத்தி சுற்றிக் கொட்டியிருந்த அடையாளத்தைக் கண்டான்.

முதலில் சேஷகிரி சொல்லியதுபோல் ஏதோ விசேஷம் வீட்டில் நடந்திருக்கிறது. அதை ஒளித்துப் பேசித் தன்னை ஏதோ வஞ்சிக்கப் பார்க்கிறான் என்கிற ஒரு கறை மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது. தனது உணர்ச்சிகளை எல்லாம் அடக்கிக்கொண்டு "சேஷகிரி" என்று கூப்பிட்டான்.

அச்சமயந்தான் நாம் முன்பு தெரிவித்ததுபோல் யாவரும் எதிர்பாராத விதம் அகல்யாவும் அவள் தாயும் அங்கு திடும் ப்ரவேசமாக வந்ததோடல்லாமல் அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியாகிவிடும்படி பூமாவைத் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டதுமான விபரீதம் நடந்துள்ள மனக்கொதிப்பில் அகிலாண்டம்மாள் அசல் காளிகா தேவியைப் போலவே மாறிப்போய் பல்லைக் கடித்துக்கொண்டு கைகளைச் சுடுக்கியவாறும் தன் கணவனை நோக்கி "இந்த அக்ரமம் எந்த தெய்வத்திற்கு அடுக்கும். வீட்டில் இன்று நல்ல சந்தோஷமான சுபகாரியங்கள் நடந்துவருகையில் அந்தப் பயலுக்கு வந்த கிறுக்கு புத்தியின் விபரீதமென்ன? படித்துவிட்டத் திமிர்படைத்துள்ளப் பெண்ணின் அநியாயச் செய்கை என்ன? இவைகளை என்னால் பொறுக்கவே முடியவில்லையே! எல்லாம் உங்களுடைய அசட்டுத் தனத்தினால் உண்டாகிய விளைவேயன்றி வேறில்லை....அந்த நாசமாய்ப் போன சேஷகிரி எங்கு ஒழிந்தானோ தெரியவில்லையே! இந்தப் பீடைப்பிணத்தைத் தூக்கிக்கொண்டு இந்த அசட்டு தைரியமுள்ள சனியன்கள் எங்குதொலைந்ததுகளோ எனக்கு மண்டையும் மார்பும் வெடித்துவிடும் போலிருக்கிறதே" என்று இன்னும் ஏதேதோ தன்போக்காகக் கத்தி இரைச்சலிடுவதை கோபு பார்த்துக் கொண்டே—கேட்டுக் கொண்டே—உள்ளே வந்தான். "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி" என்பதுபோல், "மாமீ! சேஷகிரி முக்கிய காரியமாய் வெளியே போய்வருகிறேன். நீ வீட்டிலிரு என்று சொல்லி என்னையனுப்பிவிட்டுச் சென்றான். சீக்கிரம் வந்துவிடுவான். பயப்பட வேண்டாம். ஆரத்தி....

புஷ்பம் இரைந்திருப்பது இவைகளைப் பார்த்தால் பாஸ்கரனுக்கு நிச்சயதார்த்தம் ஆகிவிட்டதுபோல் தோன்றுகிறது. பேஷ்....மெத்த சந்தோஷம். நான் யாரு தெரியுமோ இல்லையோ! சேஷகிரியின் நண்பன் கோபு. புதிய வியாபாரம் ஆரம்பித்திருக்கிறோமே! அதன் நிர்வாகி நான்தான்.'' என்று மட மடவெனக் கூறுவதைக் கேட்டு அகிலாண்டம்மாளுக்கு ஏற்கெனவே உள்ள நிலைமையின் தவிப்புப் போதாமல் பின்னும் படபடப்பும் துடிதுடிப்பும் உண்டாகி பதில்கூட சொல்ல முடியாமல் நின்றுவிட்டாள்.

புதிய வியாபாரமோ! கம்பெனியோ! எந்த விஷயமும் சந்திர சேகரனுக்குத் தெரியாததலால் அவருக்கு இவனுடைய வார்த்தைகள் பெரிய புதிர்போல் தோன்றியது. வந்தவனை வாவென்று அகிலாண்டம்மாள் சொல்லாமல் முகத்தைச் சுளித்தவாறு...''வீதியில் உட்கார்ந்திருங்கள். அவன் வரட்டும்'' என்று கூறிவிட்டு விருக்கென்று உள்ளே போய் விட்டாள்.

தன்னுடைய மதிப்புத் தெரிந்து தன்னை உள்ளே அழைத்து உட்காரவைக்காமல் வாசலில் அவமதிப்பாக உட்காரும்படிச் சொல்லிவிட்டதால் கோபுவுக்கு கோபம் வந்துவிட்டது. ''சரி! நான்பிறகு வருகிறேன்.'' என்று கடுமையான குரலில் கூறியவாறு கிளம்பியபோது விவரம் புரியாத சந்திரசேகரன் இடைமறித்து, ''மிஸ்டர்! உள்ளே வந்து உட்காருங்கள் ஸார். காத்தடிக்க, மாடிக்குப் போகலாம் வாருங்கள். சேஷகிரி இதோ வந்துவிடுவான்.'' என்று தானே பெரியதனம்செய்து அந்த மனிதனை மாடிக்கழைத்துச் சென்றதைக் கண்ட அகிலாண்டத்தின் கோபம் ஆயிரம் மடங்காகப் பொங்கியது.

என்ன பதில் சொல்லி இம்மனிதனைத் தடுப்பது என்று தெரியாமல் விழித்தாள். சேஷகிரி வருகிறானா என்று வீதியில் சென்று எட்டி எட்டிப் பார்க்கிறாள். அவன் வருகிற வழியே காணாததால் உள்ளே வந்து தானும் மாடிக்குச் சென்று அவர்களிடம் ஏதாவது பேசலாமா என்று நினைத்து மாடிக்குச் சென்றாள். உடனே அவள் கால்கள் பின்னால் இழுத்துத் தள்ளியதால் இறங்கிவிட்டாள். காரணம் புதிய வ்யாபார விஷயமாய்த் தன்னிடமே பேச ஆரம்பித்துவிட்டால் மேலும் தர்மசங்கடமாகிவிடுமே. இதென்ன க்ரகசாரம என்று மனம் நொந்தவாறு மறுபடியும் கீழே வந்துவிட்டாள். அவளுடைய மனத்துடிப்பு எல்லையை மீறியது.

183218